# பாலர் தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

220

வீ. கி. சேஷாத்திரி, பி.எ., எல்.டி.
சென்னை கல்வி இலாகா



2147

... நாயுடு ஸன்ஸ்

TB
031(9)
N46.
87108

# பாலர் தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

வீ. கி. சேஷாத்திரி, பி. ஏ., எல். டி.,
சென்னை கல்வி இலாகா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 MAY 1947
MADRAS

திருத்திய பதிப்பு

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
34, சின்னதம்பித் தெரு, சென்னை
1946

மை பதிவுசெய்தது] [விலை 8 அணா

*Revised Edition.—1946*

87108
TB 031(9) N46

# முன்னுரை

இது இவ்வாசக வரிசையின் நான்காம் புத்தகம்; நான்காம் வ[குப்]புக்குரியது. துரைத்தனத்தாரின் புதிய பாடத்திட்டத்தை யொ[ட்டி] எழுதப்பட்டது. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் இலக்க[ணக்] குறிப்புகளும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இ[டை] யிடையே செய்யுட் பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மௌன வாச[கத்] திற்கு ஏற்ற பாடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப் புத்தகத்தில் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார் அவர்களுடைய பா[டல்] களில் சிலவற்றைச் சேர்த்துக்கொள்ள அனுமதியளித்த பாரதி பிர[சுரால] யத்தாருக்கும், தங்களுடைய பாடல்களைச் சேர்த்துக்கொள்ள [அன்] புடன் அனுமதி யளித்த ஸ்ரீ சி. தேசிக விநாயகம் பிள்ளை, ஸ்ரீ சுவ[ாமி] சுத்தானந்த பாரதியார், நாமக்கல் ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை [அவர்] களுக்கும் எனது ஆழ்ந்த நன்றி உரியதாகும்.

இப் புத்தகத்தைப் பரிசோதித்து உதவிய திருச்செங்கோடு தமி[ழ்ப்] பண்டிதர் ஸ்ரீ சீரங்க முதலியார் அவர்களுக்கு என் வந்தனம் உரி[யது].

தமிழ்ப் பாஷையைக் குழந்தைகள் செவ்வனே கற்க இப்புத்[தகம்] பயன்படும் என்று நம்புகிறேன்.

## திருத்திய பதிப்புக்கு முன்னுரை

இப் புத்தக வரிசை பிரசுரித்து நான்கு ஆண்டுகள் ஆயி[ன]. இதைத் தமது பாடசாலைகளில் பல ஆசிரியர்கள் பாட புத்தக[மாக] வைத்து, அனுபவத்தில் கண்டறிந்த பல திருத்தங்களை அன்புகூர்[ந்து] எனக்குத் தெரிவித்தனர். அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து, தே[வை] யானவற்றை இப்பதிப்பில் புகுத்தியுள்ளேன். இச்சிறு முயற்சியை தமிழுலகம் ஆதரிக்கும் என்று நம்புகிறேன்.

திருச்சி :
5-10-'45.

வீ. கி. சேஷாத்திரி

# பாடத் திட்டம்

1. வாய்மொழிப் பயிற்சி: கட்டுரைகள் எழுதுவதற்கு முன்னால், கதைகள் அல்லது சம்பவங்களின் அம்சங்களைத் தொகுத்தல்.

2. எழுத்து — சொந்த, சமூகக் கடிதங்கள் மூலமாகக் கட்டுரைகள் எழுத ஆரம்பம்; வருடத்தின் பிற்பகுதியில் சொந்த சம்பவங்களைப் பற்றி எழுதப் பிரயத்தனம் செய்தல்.

3. வாசிப்பு:

(a) அதிகமான வார்த்தைகள் தெரிந்துகொள்ளவும் எண்ணங்கள் விஸ்தரிக்கவும்.

(b) வேறு புத்தகங்களைப் படிப்பதன் மூலமாக மௌன வாசிப்பில் வேகம் அதிகரிக்கவும், விஷயத்தைக் கிரகித்துக்கொள்ளவும் குறிப்பிட்ட பயிற்சி அல்லது பழக்கம் ஏற்படவேண்டும். இவ்வாண்டில் வசனப் பகுதிகளை விரிவாகப் போதித்தல்; நல்ல செய்யுட் பகுதிகளைக் கற்பித்தல்; இவற்றின் மூலமாகப் பொதுச் சொற்களின் அறிவையும், பிற பாடங்களுக்குச் சம்பந்தப்பட்ட கலைச் சொற்களின் அறிவையும் விருத்தி செய்தல்.

புதிய சொற்கள் சுமார் 700.

4. இலக்கணம் — முக்கியப் பகுதிகள் — வினைச் சொற்களும் எழுவாயும் ஒத்திருத்தல், காலங்களின் சரியான உபயோகம், மூன்று காலங்கள், சொற்களின் மற்ற இலக்கணப் பகுதிகளை அறிதல்; காற்புள்ளி, முற்றுப்புள்ளி, நேர்ப்பேச்சுக் குறிகள் இவற்றின் உபயோகம்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| | இறைவன் துதி — நாமக்கல் ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை | 6 |
| 1. | நமது நாடு | 7 |
| 2. | எங்கள் நாடு — ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார் | 12 |
| 3. | நமது உணவு | 13 |
| 4. | பகாசுரன் | 18 |
| 5. | வேடனும் புறாக்களும் - I | 23 |
| 6. | பிட்டுக்கு மண் சுமந்தது — மின்னொளியாள் குறம் | 28 |
| 7. | இயேசு கிறிஸ்து | 30 |
| 8. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் | 34 |
| 9. | நவராத்திரி | 37 |
| 10. | புலிக் கூடு — ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை | 42 |
| 11. | வேடனும் புறாக்களும் - II | 44 |
| 12. | மின்சாரம் | 48 |
| 13. | சுவாமி விவேகானந்தர் | 53 |
| 14. | தூங்கும் தூக்கணங் குருவிகளும் — பஞ்சதந்திரப் பாடல் | 57 |
| 15. | என் வாழ்க்கை வரலாறு | 58 |
| 16. | பாரி | 62 |
| 17. | கூட்டுறவுச் சங்கம் | 66 |
| 18. | கண்ணன் துதி — ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை | 70 |
| 19. | கிராம வாழ்க்கை | 72 |
| 20. | பீஷ்மர் சபதம் | 77 |
| 21. | நூல் நிலையம் | 82 |
| 22. | குழந்தை யழகு - ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார் | 87 |
| 23. | அபு பகர் | 89 |
| 24. | மனோவன்மை | 94 |
| 25. | குசேலர் — (நாடகம்) | 98 |
| 26. | செய்யுட் பகுதி | 104 |
| —. | தேச வாழ்த்து — நாமக்கல் ஸ்ரீ வெ. இராமலிங்கம் பிள்ளை | 112 |



சுவாமி விவேகானந்தர்

# இறைவன் துதி

(விருத்தம்)

அன்பினுக் கன்பாய்வந்து அறிவினுக்கறிவாய் நின்று
அறிந்தவர்க் கெளியனாகி அல்லவர்க் கரியனாகி
முன்பினும் நடுவோன்றின்றி முதுமுறை தனக்கு மேட்டான்
மூடர்கள் மனதிற்கூட மூலையிலொதுங்கி நின்று
செம்பினும் கல்லினாலும் செய்தவை யெல்லாமாகிச்
சிலந்தி போற்கூடுகட்டிச் சிலுவையில் மறைந்தான்போல
என்பினுக் கென்பாயென்னும் எம்முள்ளே விளங்குகின்ற
எழுஞ்சுடர் ஜோதியான இறைவனை இறைஞ்சி நிற்பாம்.

— நாமக்கல் ஸ்ரீ வே. இராமலிங்கம் பிள்ளை.

# பாலர் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

## 1. நமது நாடு

1. நாம் வசிக்கும் இந்நாடே நமது நாடு. இதற்கு **இந்தியா** என்று பெயர். இதை நாம் **பரத கண்டம்** என்றும் சொல்லுகிறோம். இத்தேசத்தை முன்னாளில் பரதன் என்ற சக்கரவர்த்தி ஆண்டு வந்தமையால் இதற்கு இப்பெயர் அமைந்தது.

2. நமது தேசத்திற்கு வடக்கு எல்லையாக இமய மலை அமைந்திருக்கிறது. மற்ற மூன்று திசைகளிலும் நமது நாட்டைச் சமுத்திரம் சூழ்ந்திருக்கிறது. ஆகையால், நம் நாட்டிற்கு இயற்கையாகவே அரண்கள் அமைந்திருக்கின்றன.

3. உலகிலுள்ள மலைகள் எல்லாவற்றிலும் பெரியது இமயமலையே. இம் மலைக்கு வடக்கேயுள்ள தேசங்களினின்று எவரும் இதைக் கடந்து நமது நாட்டினுள் புகமுடியாது. இம் மலையை எக்காலத்திலும் உறைபனி மூடிக்கொண்டிருக்கும். இதன் சிகரங்கள் வானையளாவி நிற்கின்றன. நமது பழங் காவியங்களில் இம்மலையை 'வெள்ளி மலை' என்று வர்ணித்திருக்கின்றனர். பரமசிவனார் உறைவிடமாகிய திருக்கயிலாயம்

இம்மலையின் கண்ணே உள்ளது என்றும், இங்கு அநேக யோகிகளும், முனிவர்களும் இன்றும் வாசம் செய்கின்றனர் என்றும் கருதப்படுகிறது. ஆகவே, இம்மலை மிகவும் புராணப் பிரசித்தமானதாகும்.




**4.** மிகப் புண்ணிய நதிகளாகிய கங்கை, யமுனை, சிந்து என்பன இம்மலையினின்றே உற்பத்தியாகின்றன. தண்ணீர் எக்காலத்திலும் வற்றாத ஜீவநதிகள் இவை. இவைகளே வட இந்தியாவிற்குச் செழிப்பை அளிக்கின்றன. நமது தென் நாட்டிலும் அநேக நதிகள் பாய்கின்றன. இந்நதிகளால் நமது நாடு விவசாயத்தில் முதன்மை பெற்று விளங்குகிறது. இது சிந்து நதி

பாயப்பெற்ற நாடான படியால் சிந்து தேசம் எனப் பெயர் பெற்றது. அப்பெயரே நாளடைவில் 'இந்தியா' வென மாறியது.

**5.** நம் நாட்டிற்கு வடமேற்கிலும் சில மலைகள் இருக்கின்றன. அவற்றின் இடையே இரண்டு கணவாய்கள் உள்ளன. அக் கணவாய்களின் வழியாகவே அயல் நாட்டினர் நம் நாட்டின்மீது அவ்வப்பொழுது படையெடுத்து வந்தனர். அவை இப்பொழுது நன்கு காவல் செய்யப்படுகின்றன.

**6.** இத்தேசத்தை விந்தியமலை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறது. தென்னிந்தியாவில் மேற்குத்தொடர்ச்சி மலை, கிழக்குத்தொடர்ச்சி மலை என்ற உயரமான மலைத்தொடர்கள் இரண்டு அமைந்திருக்கின்றன. மலைகளும் நதிகளும் இயற்கைக் காட்சிகளும் பல் வளங்களும் இந் நாட்டில் காணலாம். மலைச் சாரல்களிலுள்ள சோலைகளும் காடுகளும் பிரசித்தி பெற்றவை. இங்கு நவதானியங்களும் செழிப்பாகப் பயிராகின்றன. ஆங்காங்கே உலோகச் சுரங்கங்களும் உண்டு. காடுகளில் பிராணிகள் ஏராளமாக வசிக்கின்றன.

**7.** இந்தியா பண்டைக்காலம் முதல் சீரும், சிறப்பும் நாகரிகமும் மிக வாய்ந்துள்ளது. நம் நாட்டினர் கல்வியிலும், புகழிலும், ஞானத்திலும், வீரத்திலும் சிறந்தவர்கள். நமது புராணங்களும் இதிகாசங்களும், பாரம்பரை வரலாறுகளும் நம் முன்னோர்களின் நாகரிக மேன்மையை எடுத்துக் காட்டுகின்றன.

8. இந் நாட்டில் பல வியாபார ஸ்தலங்களும், துறைமுகங்களும், புண்ணிய நகரங்களும் இருக்கின்றன. அநேகவிதமான இயந்திர சாலைகளும், கைத்தொழில்களும் விருத்தியடைந்து வருகின்றன. இயற்கை வளங்கள் மிகுதியுள்ள நம் நாட்டில் செயற்கை வளங்களும் விருத்தியடையச் செய்வது நம் கடமையாகும்.

9. இந்தியா சுமார் முப்பத்தோன்பது கோடி ஜனங்களுக்கு உறைவிடமாக இருக்கிறது. இவர்களில் பெரும்பாலோர் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். மற்றவர்கள் முகம்மதிய மதத்தையும் கிறிஸ்துவ மதத்தையும் தழுவியுள்ளனர். இன்னும் பிற மதத்தினரும் உளர். நம்மிடையே வழங்கிவரும் பாஷைகளும் அநேகம். தெற்கே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளும், வடக்கே உருது, இந்தி, மராட்டி, வங்காளி முதலான பாஷைகளும் பேசப்படுகின்றன. நாம் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். நம்மிடையே எவ்வித வேற்றுமைகள் இருந்தபோதிலும் நாம் அனைவரும் இந்திய மக்களே. இளமையிலிருந்தே 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரு மோரினம், எல்லோரும் இந்தியா மக்கள்' என்ற ஒற்றுமை உணர்ச்சி நமக்குள் ஏற்படவேண்டும்.

10. ஆகவே, நம்மிடையேயுள்ள வெவ்வேறு மொழிகளும், பழக்க வழக்கங்களும், மதங்களும் ஒற்றுமைக்கு இடையூறுகள் எனக் கருதாமல், ஒருவரை

யொருவர் நேசித்து, மனம் ஒத்து நாம் வாழ்ந்து வந்தால், நமது நாட்டிற்குப் பெருமையும், நமது வாழ்க்கையால் பயனும் உண்டு.

---

I. கேள்விகள் :

1. நமது நாட்டிற்குப் பரதகண்டம் என ஏன் பெயர் வந்தது ?
2. இயற்கை அரண் என்றால் என்ன ?
3. நம் நாட்டிற்கு வடக்கு எல்லை எது ?
4. இமயமலை எவ்வாறு புராணப் பிரசித்தமானது ?
5. நம் நாட்டில் பாயும் நதிகள் யாவை ?
6. 'இந்தியா' என்று எவ்வாறு பெயர் வந்தது ?
7. நம் நாட்டின் இயற்கை வளங்கள் யாவை ?
8. நம் முன்னோர்களின் நாகரிக மேன்மையை எவ்வாறு அறிகிறோம் ?
9. நம்மிடையே எவ்வகை உணர்ச்சி ஏற்படவேண்டும் ?
10. நம் நாட்டிற்குப் பெருமை எவ்வாறு ஏற்படும் ?

II. கடின பதங்கள் : அரண், இயற்கை, செயற்கை, சிகரம், உறைபனி, கடந்து, வானளாவி, காவியம், பிரசித்தம், வளம், சுரங்கம், நாகரிகம், உறைவிடம், இனம், உணர்ச்சி, இடையூறு, பயன்.

III. இலக்கணம் :

வாக்கியம் : நமது தேசத்திற்கு வடக்கே இமயமலை இருக்கிறது — இது ஒரு வாக்கியம். இது ஒரு முற்றுப் பெற்ற கருத்தைக் காட்டுகிறது. இம்மாதிரிப் பல சொற்கள் சேர்ந்து

ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிப்பதே வாக்கியம் எனப்படும். வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். வாக்கியத்திலுள்ள சொற்கள் ஒரு முடிந்த கருத்தைக் கொடுக்கும் படியான சரியான வரிசையில் அமைந்திருக்க வேண்டும்.

IV. பயிற்சி:

1. நமது நாட்டைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
2. II-இல் காணும் பதங்களில் பெரும் எழுத்துக்களிலுள்ள சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுது.

V. எதிர்ப்பதங்கள் கூறுக: இயற்கை, ஒற்றுமை, இளமை, பெருமை, ஞானம், நேசம்.

## 2. எங்கள் நாடு

இராகம் - பூபாளம்

மன்னு மிமய மலை யெங்கள் மலையே ;
மாநில மீதது போற்பிறி திலையே !
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே ;
இங்கிதன் மாண்பிற் கெதிரேது வேறே ?
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே ;
பார்மிசை யேதொரு நூலிது போலே !
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே ;
போற்றுவ மிஃதை யெமக்கில்லை ஈடே.

— ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியார்.

I. கடின பதங்கள் : மன்னும், மாநிலம், பிறிது, மாண்பு, பன்னரும், பார்மிசை, பொன்னொளிர்.

II. உபநிடம் - உபநிஷத்துக்கள் : ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களின் அங்கங்களே உபநிஷத்துக்கள்.

III. பாரத நாட்டின் சிறப்பான அம்சங்களை நான்கு வாக்கியங்களில் எழுது.

IV. பின்வரும் சொற்களைப் பொருள் விளங்கும் வாக்கியங்களாக மாற்றி அமைக்கவும் :

1. பெரிய இமயமலை உலகத்தில் மலை.
2. வாழ்ந்திருந்தனர் அநேக இந்தியாவில் முனிவர்கள்.
3. பழமையான மிகவும் நாடு இந்தியாவானது.
4. வாழ்ந்திருந்தனர் மிகச் சிறந்த தேசத்தில் வீரர்கள் நமது.
5. வேறு உலகத்தில் உபநிஷத்தைப் போல் இல்லை நூல்கள்.

## 3. நமது உணவு

**1.** நமது தேகத்திற்கு வலிவும் வனப்பும் அளிப்பது உணவேயாகும். உடலின் வளர்ச்சிக்கும் உணவு இன்றியமையாதது. நமக்கு நல்ல இரத்தத்தை அளிப்பதும் உணவேயாம்.

**2.** நமது உடல் ஒரு வகை இயந்திரம். இந்த இயந்திரத்தின் ஒவ்வொரு உறுப்பும் ஆச்சரியமான

தொழிலைச் செய்கிறது. அவ்வாறு செய்ய நல்ல உணவு அவசியம். 'நல்ல உணவு' என்பதைச் சற்று ஆராய்வோம்.

3. நமது உடல் பெரும்பாலும் கஞ்சிப் பசையாலும், கொழுப்பாலும், சதையாலும் ஆனது. அரிசி போன்ற பண்டங்கள் கஞ்சிப் பசையை அளிக்கின்றன. வெண்ணெய், நெய் போன்றவை கொழுப்பை





வளர்க்கின்றன. பருப்புச் சத்துக்கள் சதையின் வளர்ச்சிக்கு உபயோகமானவை. இவற்றுடன், நம் தேகத்திற்கு வலிமை அளிக்கவல்ல பழங்கள், கீரை வகைகள், பால், மோர், காய்கறிகள் இவற்றையும் உண்பது மிக்க நன்மை பயக்கும்.

4. நாம் உட்கொள்ளும் உணவே இரத்தமாக மாறி, உடலிற் பரவி, பலம் கொடுக்கிறது. நாம் உண்ணும்

உணவு நன்கு ஜீரணமாக வேண்டும். ஒழுங்காகத் தேகப்பயிற்சி செய்து வந்தோமானல், நமது உறுப்புக்கள் வலிவடையும்; இரத்தம் விருத்தியடையும்; உணவு ஜீரணமாகும். உணவு எவ்வாறு ஜீரணிக்கப்படுகிறது?

5. முதன் முதல் நம் வாயிலுள்ள உமிழ் நீருடன் உணவு கலக்கிறது. உணவை நன்ருக மென்ருல், அதிலுள்ள கஞ்சிப்பசை உமிழ் நீருடன் கலந்து, சர்க்கரையாக மாறுகிறது. இச் சர்க்கரைப் பொருள் மெல்லிய இரத்தக் குழாய்கள் மூலம் சென்று உதிரத்துடன் சேர்கிறது. உணவின் மற்றைப் பாகம், வயிற்றிலுள்ள இரைப்பைக்குச் செல்லுகிறது. இங்குள்ள ஒருவகைத் திரவம் பருப்புச் சத்துக்களை ஜீரணிக்கிறது. இதுவும் முன்போல் மெல்லிய இரத்தக் குழாய்களின் மூலம் இரத்தத்துடன் கலக்கிறது. இரைப்பைக்கு அருகிலுள்ள சிறுகுடல் ஆரம்பமாகும் இடத்தில் சுரக்கும் பித்தநீர் உணவிலுள்ள கொழுப்புப் பொருளை ஜீரணிக்கிறது. இம்மூன்று இடங்களிலும் கரையாத உணவுப் பொருள்களை 'மதுரசம்' என்ற பொருள் கரைத்து விடுகிறது. ஆகவே, நாம் உட்கொள்ளும் உணவானது வெவ்வேறு வழிகளில் இரத்தமாக மாறி, நமக்கு வலிமையை அளிக்கிறது. சத்து நீங்கிய பொருள்கள் மலமாக வெளிப்படுகின்றன.

6. தினந்தோறும் நாம் நமது வேலைகளைச் செய்து வருவதால் நமக்கு உடற்சோர்வு உண்டாகிறது. இச் சோர்வைப் போக்கவும் புது இரத்தம் நமது உட

லெங்கும் பரவவும் நமக்கு உணவு அவசியம். உணவு சுத்தமாயும் சத்துள்ளதாயும் இருக்கவேண்டும். மித மாக உண்பது அவசியம். 'அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சே.'

7. நமது முக்கிய உணவாகிய அரிசியில் கஞ்சிப் பசை அதிகம். இது நமது உடல் வளர்ச்சிக்குப் போதாது; ஆதலால் துவரம் பருப்பையும் சேர்த்துக் கொள்ளுகிறோம். கொழுப்பை வளர்க்க நெய் சேர்த் துக் கொள்ளுகிறோம். எலும்புகளை வளர்க்கக் காய் கறிகளை உட்கொள்ளுகிறோம். கடைசியில் மோர் சாப் பிடுகிறோம். மோர், உணவை ஜீரணிக்க உதவுவதுடன், எலும்பு, பல் முதலிய உறுப்புக்களையும் வளர்க்கிறது.

8. வட இந்தியர்கள் கோதுமையை முக்கிய உண வாகக் கொள்ளுகிருர்கள். அரிசியைவிடக் கோதுமை யில் உடலுக்கு வலிமை கொடுக்கும் சத்து அதிகம். பால் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அதனு லேயே குழந்தைகளுக்குப் பசும் பால் கொடுக்கிறோம்; நாமும் குடிக்கிறோம்.

9. கீரை வகைகள் நமது உடல் நலத்திற்கு மிகச் சிறந்தவை. இவை மலத்தை இளகச் செய்து மலக் குடலைச் சுத்தம் செய்கின்றன. மலக்குடல் சுத்தமாக இருந்தால், நோய் நம்மை அணுகாது.

10. நமக்கு ஏற்ற உணவுவகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அரசாங்கத்தார் கூனூரில் ஒரு 'உணவு

ஆராய்ச்சிச் சாலை' ஏற்படுத்தி யிருக்கின்றனர். இங்கே அநேக உணவு வகைகள் பரிசோதிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் வெளியிடப்படுகின்றன. அரிசியில், கையால் குத்தப்பட்ட அரிசியே சத்துள்ளதென்று உணவு நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். ஆரோக்கியமான உணவினால் தேகம் வலிவடையும்; வனப்பு உண்டாகும்; ஆயுள் நீடிக்கும்; நோய்கள் அணுகா; நமது வாழ்நாட்களில் இன்பமடைவோம்.

---

I. கேள்விகள் :

1. உணவினால் யாது உபயோகம்?
2. உடல் எவ்வெப் பொருள்களினால் அமைக்கப்பட்டிருக்கிறது?
3. உட்கொள்ளும் உணவு எவ்வாறு ஜீரணிக்கப்படுகிறது?
4, எப்படிப்பட்ட உணவை நாம் உட்கொள்ளவேண்டும்?
5. சத்துள்ள உணவு வகைகள் எவை?
6. உணவு ஆராய்ச்சிச் சாலை எங்குள்ளது? அதை ஸ்தாபித்ததின் நோக்கம் என்ன?

II. கடின பதங்கள் : வலிவு, வனப்பு, உறுதி, உதிரம், சோர்வு, மிதம், ஆராய்ச்சி, பரிசோதனை, அபிப்பிராயம், நிபுணர்கள்.

III. இலக்கணம் :

பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் என்றும், செய்கையைக் காட்டும் சொல் வினைச்சொல் என்றும் நாம் ஏற்கெனவே அறிந்தோம்.

பயிற்சி : இப் பாடத்திலிருந்து பத்து பெயர்ச் சொற்களை யும், பத்து வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

IV. கீழ்க்கண்ட வாக்கியங்களில் விட்ட இடங்களைப் பூர்த்தி செய் :

1. உணவு நமது தேகத்திற்கு ——— ——— அளிக்கும்.
2. நாம் உட்கொள்ளும் உணவு ——— மாறுகிறது.
3. வாயிலுள்ள ——— உணவு கலக்கிறது.
4. ——— போக்க நாம் உணவு ——— வேண்டும்.
5. அடிக்கடி உண்பதால் ——— ஏற்படும்.

## 4. பகாசுரன்

1. பஞ்ச பாண்டவர்கள் தங்கள் தாயாராகிய குந்தி தேவியுடன், கௌரவர்கள் அறியாமல் பிராமண வேஷம் பூண்டு, **ஏகசக்ர நகரம்** என்னும் ஊரில், ஒரு அந்தணர் வீட்டில் குடியிருந்து வந்தனர். அக் காலத்தில் அவர்கள் பிச்சை எடுத்துத் தங்கள் தாயா ருடன் உண்டு வந்தனர். கிடைத்த உணவில், பாதி யைப் பீமனும் மிகுந்த பாதியை மற்றவரும் புசித்து வந்தனர். பீமனுக்கு அவ்வுணவு போதாமல், நிறம் மாறி இளைக்க ஆரம்பித்தான். அதுகண்ட அவன் தாய் கவலைக் குள்ளானாள்.

2. அவர்கள் குடியிருந்த வீட்டில் திடீரென்று ஒரு நாள் அழுகுரல் கேட்டது. குந்தி, அதன் காரணத்தை விசாரிக்கச் சென்றாள். வீட்டிலுள்ளோரை "ஐயா! நீங்கள் ஏன் துக்கித்துக்கொண் டிருக்கிறீர்கள்?" என்று

வினவினள். அதற்கு அவ்வீட்டுப் பிராமணன், "அம்மா, இவ்வூருக்குச் சிறிது தூரத்தில் ஒரு குகையில் பகன் என்ற ஒரு அசுரன் வசிக்கிறான். அவன் நரமாமிச பட்சணி. அவனே இந்தப் பிரதேசத்திற்குத் தலைவன். அவனுக்குத் தினந்தோறும் ஒரு மனிதனையும், காய்கறி மதுவகைகளையும் இக்கிராமத்தார் அளிக்க



வேண்டும்; இன்றேல், இக்கிராமத்தை அவன் அதம் செய்வான். இதற்கு ஒருமுறை உண்டு. இன்று என் வீட்டு முறை. நான் உணவு தயார் செய்து விட்டேன். ஆனால் ஒரு மனிதனையும் கொடுக்கவேண்டுமே! என்ன செய்வேன்? யாரை நான் பலி கொடுப்பேன்? இதுவே எங்கள் துக்கத்தின் காரணம்'' என்றான்.

3. அது கேட்ட குந்தி, "ஐயா, நீர் கவலைப்பட வேண்டாம். என் ஐந்து குமாரர்களில் ஒருவனை

உமக்குப் பதிலாகப் பகாசுரனிடம் அனுப்புகிறேன்; ஒரு குமாரனை நான் இழந்தாலும் மீதி நால்வர் இருக்கின்றனர்,” என்று அப்பிராமணனைத் தேற்றினள். அவ்வந்தணன், “அம்மா! நீங்கள் என் விருந்தினர். உங்களுக்குக் கஷ்டம் சம்பவிக்க நான் சம்மதிக்க மாட்டேன். எங்கள் விதியை நாங்களே அனுபவிக்கிறோம்” என மறுத்தான். குந்தி அவனைத் தேற்றித் தன் யோசனைக்கு இணங்கச் செய்தாள்.

4. பின்னர், குந்தி பீமனை அழைத்து இச்செய்தியைத் தெரிவித்தாள். பீமன் முகமலர்ச்சி யடைந்தான். “ஒரு நாளாவது நாம் திருப்தியாகப் புசிக்கலாம்” என்று சந்தோஷித்தான். ‘பீமன் அந்த அரக்கனைக் கொன்றுவிட்டுத்தான் திரும்புவான்; அவனுக்குப் போதிய ஆகாரமும் கிடைக்கும்’ என்று குந்தி நம்பிக்கை கொண்டாள்.

5. பிராமணன் பீமனுக்கு அறுசுவையுடன் போஜனம் செய்வித்தான். பிறகு அன்னம், மாமிசம் முதலிய உணவு வகைகளை ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு, பீமன் அரக்கனை நாடிச் சென்றான்.

6. சிறிது தூரத்தில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அங்கிருந்து துர்நாற்றம் சகிக்க முடியாமல் வந்துகொண்டிருந்தது. அங்கங்கே மனித உடல்களின் உறுப்புகளும், எலும்புகளும் சிதறிக் கிடந்தன. ‘இப்படிப்பட்ட அரக்கனுக்கு இந்த அருமையான உணவை ஏன் கொடுக்கவேண்டும்? எனக்கும் பசி

எடுக்கிறது' என்று பீமன் எண்ணி, தான் கொணர்ந்த ஆகாரத்தை உண்ண ஆரம்பித்தான்.

7. அப்பொழுது, அருகிலிருந்த குகையினின்றும் பகன் என்ற அவ்வரக்கன் பீமனை நோக்கி ஓடி வந்தான். உணவைத் திருப்தியுடன் புசித்துக்கொண்டிருந்த பீமன், அவனைப் பார்த்துப் பரிகசித்தான். அரக்கன் கடுங்கோபம் கொண்டு இடிபோல் கர்ஜித்தான். அப்பொழுதும் பீமன் சிறிதும் அசையவில்லை. இராட்சதன் கோபாவேசத்துடன் ஒரு மரத்தை வேருடன் பிடுங்கிப் பீமனை நோக்கி எறிந்தான். பீமன் அதைத் தன் இடது கையால் தடுத்துவிட்டு, வலது கையால் உணவை யெடுத்துப் பின்னும் புசித்துக் கொண்டே இருந்தான். அரக்கன் வெகுண்டு, பின்னும் ஒரு மரத்தைப் பிடுங்கிப் பீமன்மேல் வீசினான். அதற்கும் அசையாது, பீமன், தயிர்க் குடங்களையும் பாற்குடங்களையும் காலி செய்தான். உணவு வகைகளைப் புசித்த பின்னர், பீமன் சாவகாசமாக எழுந்து, பகனுடன் போர்புரிந்து, அவனைத் தூக்கித் தரையிலடித்து வதம் செய்தான்.

8. பகாசுரனைக் கொன்ற பீமன், ஏகசக்ர நகரம் சென்று 'இனி உங்களுக்குப் பயமில்லை' என்று ஜனங்களைத் தேற்றினான். இறந்த அரக்கனை யாவரும் பார்த்துத் தங்கள் கலி தீர்ந்தது என்று ஆனந்த மடைந்தனர். தங்கள் குறையைத் தீர்த்த பீமனையும், குந்தி தேவியையும் தெய்வங்களாக மதித்துக் கௌரவித்தனர்.

I. இப்பாடத்தை மௌனமாகப் படித்துப் பின் கீழ்க்கண்ட கேள்விகட்கு விடைகள் எழுது:

1. பீமன் ஏன் இளைக்க ஆரம்பித்தான்?
2. அந்தணன் விடுதியில் ஏன் துக்கித்துக் கொண்டிருந்தனர்?
3. பகன் என்பவன் யார்?
4. அவன் உணவு என்ன?
5. குந்தி எவ்வாறு பிராமணனைத் தேற்றினாள்?
6. பீமன் ஏன் சந்தோஷமடைந்தான்?
7. உணவு வகைகளைப் பீமன் என்ன செய்தான்?
8. கிராமத்தார் பீமனை எவ்வாறு போற்றினார்கள்?

II. **கடின** பதங்கள்: கவலை, விடுதி, வினவுதல், நரன், பட்சணி, அதம், பலி, முகமலர்ச்சி, ஆறுதல், அறுசுவை, துர்நாற்றம், அரக்கன், பரிகாசம், கர்ஜனை, வெகுண்டு, கலி, கௌரவம்.

III. 1. எதிர்ப்பதங்கள் **கூறுக**: கவலை, துர்நாற்றம், அரக்கன், வெகுளி.

2. அறுசுவைகள் யாவை?

IV. பீமன் பகாசுரனிடம் போர் செய்த விவரத்தைத் தன் தாயாரிடம் பீமன் சொல்வதுபோல் எழுதுக.

V. இலக்கணம்:

முன் புத்தகத்தில் முற்றுப்புள்ளிகளைப் பற்றி அறிந்து கொண்டோம். ஒரு வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இடுகிறோம். முற்றுப்புள்ளியிட்டால், வாக்கியத்தின் கருத்து முடிந்துவிட்டது என்று பொருள்.

முற்றுப்புள்ளிகளைத் தவிர வேறு சில புள்ளிகளும் உண்டு. இது (,) கால் புள்ளி. ஒரு வாக்கியத்திலுள்ள கருத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதி முடியும் இடத்திலும் கால் புள்ளிகள் இடுகிறோம். இதற்குக் 'கமா' என்றும் பெயர்.

கீழுள்ள வாக்கியங்களில் காற்புள்ளி, முற்றுப்புள்ளிகளை இடுக:—

1. நம் நாட்டு மக்கள் பண்டைக் காலத்தில் கல்வியிலும் நாகரிகத்திலும் வீரத்திலும் தியாகத்திலும் மேம்பட்டு விளங்கி வந்தனர்

2. பீமன் அதற்கும் அசையாது தன்னெதிரிலிருந்த தயிர்க்குடங்களையும் பாற்குடங்களையும் உணவுவகைகளையும் காலிசெய்து கொண்டிருந்தான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 2 MAY 1947 MADRAS

## 5. வேடனும் புறாக்களும் – I

1. புண்ணிய நதிகளுள் ஒன்றாகிய கோதாவரி நதிக்கரையில் பெரிய வன்னி மரம் ஒன்று இருந்தது. ஒரு நாள் விடியற்காலை இயமனைப்போல் மிகப் பயங்கரமான உருவமுள்ள ஒரு வேடன் அங்கே வந்தான். அவ்வேடன், தன் தொழிலிற் கேற்ப, அம்மரத்தின் கீழ் பலவகைத் தானியங்களைத் தெளித்து, அதன்மேல் ஒரு வலையை விரித்தான். பிறகு ஆங்கிருந்த ஒரு செடி மறைவிற் பதுங்கிக்கொண்டான்.

2. அது காலை, சித்திரக்கிரீவன் என்ற புறா அரசு தன் பரிவாரங்களுடன் வந்து அம்மரத்தில் இறங்

கிற்று. கீழே சிதறிக்கிடந்த தானியங்களைப் பார்த்த புருக்கள் அவற்றைப் புசிக்க ஆவல் கொண்டன. அப்போது சித்திரக்கிரீவன் தன் பரிவாரங்களைப் பார்த்து, "மனிதர்களே இல்லாத இக்கானகத்தில் தானியம் எப்படி வரும்? யாரேனும் கொண்டுவந்து இங்கு தெளித்



திருக்கவேண்டும். தீர ஆலோசியாமல் இதை நாம் புசிக்கலாகாது. அப்படி ஆசைப்பட்டுப் புசித்தால் பொற்காப்புக்கு ஆசைப்பட்ட பிராமணன் ஒரு புலியினால் எவ்வாறு மரணமடைந்தானே, அவ்வாறே நமக்கும் தீங்கு சம்பவிக்கும்" என்றது.

3. அது கேட்ட புருக்கள், "மகாராசாவே! அது எப்படி?" என்று கேட்க, சித்திரக்கிரீவன் சொல்லுகிறது:

## புலியும் பிராமணனும்

"ஒரு கிழப்புலி மிகவும் பலவீனத்தால் உணவு தேட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. ஒருநாள் அது ஏரியில் நீராடி, கையில் தருப்பையை வைத்துக்கொண்டு, கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தது. அச்சமயம் ஒரு பிராமணன் அவ்வழியே வந்தான்.

புலி அவனைக் கூப்பிட்டு, "ஓ பிராமணரே! உமக்கு ஒரு பொற்காப்புத் தருகிறேன், வாரும்" என்றது. பிராமணன் அது கேட்டு, "இக்காப்பு நமக்கு வலியக் கிடைக்கிறது. ஆனால் நமக்குச் சத்துருவாகிய புலியினிடம் அது இருக்கிறது. மரணம் எவ்வகையிலும் சம்பவிக்க வழியுண்டு. ஆகையால், நாம் எவ்வாறேனும் அக்காப்பை அடைய வேண்டும்" என்று யோசித்தான். புலியை நோக்கி, "ஓ புலியாரே! அக்காப்பு எங்கே?" என்று கேட்டான்.

புலி, "பிராமணரே! இதோ, பாரும்" என்று ஒரு காப்பைக் காண்பித்தது.

பிராமணன் "நீ மனிதர்களுக்குச் சத்துருவன்றோ? உன்னிடம் நான் எவ்வாறு வருவேன்? உன் நல்லெண்ணத்தில் நான் எவ்வாறு நம்பிக்கை வைக்கமுடியும்?" என்று வினவினன்.

புலி "நான் கொலைத்தொழிலை அறவே விட்டுவிட்டேன். மேலும் பற்களும் நகங்களுமில்லாத கிழவன்

நான். தினந்தோறும், விடியற்காலையில் ஸ்நானப் செய்து, தானம் செய்கிறேன். என்னை நீ நம்பலாம்' என்றது.

பிராமணன் "உண்மையே. ஆனாலும் புலி மனி தரை அடித்துத்தின்னும் பிராணி ஆயிற்றே" என்றான்

புலி "ஆம். ஆனால், நான் எல்லா சாஸ்திரங் களையும் கற்றவன். எல்லோருக்கும் அவரவர்கள் உயி ரின்மேல் வெகு பிரியம். ஆகையினால்தான் சாதுக்கள் பிராணிகளிடத்தில் தயையுடன் இருக்கின்றனர். நீ மிகவும் தரித்திரன். ஆகையால் உனக்கு இக்காப்பை அளிக்கிறேன். இந்த ஏரியில் மூழ்கிவந்து என்னிடம் உள்ள காப்பைப் பெற்று வீட்டிற்குப் போ" என்று ஆசைகாட்டியது.

பிராமணன் புலியின் வார்த்தைகளை நம்பினான். ஸ்நானம் செய்ய ஏரியில் இறங்கினான். அவன் கால்கள் உளையிற் புதைந்துகொண்டதால், வெளியே வரக்கூடாமல் திகைத்தான்.

புலி "ஐயா, அவ்விடமே இரும். உம்மைச் சேற்றினின்றும் எடுத்துவிடுகிறேன்," என்று சொல்லி, மெல்ல எழுந்து சென்று அவ்வேதியனைப் பிடித்துக் கொண்டது.

அப்பொழுதுதான் தான் வஞ்சிக்கப்பட்டதை அந்தணன் அறிந்தான். புலியோ அவனைக் கொன்று தின்றது.

"ஆகையால், நாம் எக்காரியத்தையும் தீர ஆலோசித்தே செய்யவேண்டும்" என்று சித்திரக்கிரீவன் தன் புருக்களுக்குச் சொல்லிற்று.

---

I. இப்பாடத்தை மௌனமாய்ப் படித்து விடைகள் எழுது:

1. வன்னி மரம் எங்கிருந்தது?
2. வேடன் என்ன செய்தான்?
3. மரத்தின்கீழ் சித்திரக்கிரீவன் என்ன பார்த்தது?
4. சித்திரக்கிரீவன் ஏன் சந்தேகித்தது?
5. புலி பிராமணனை எவ்வாறு ஏமாற்றியது?
6. பிராமணன் எவ்வாறு புலியினிடம் அகப்பட்டான்?
7. சித்திரக்கிரீவன் புருக்களுக்குச் சொன்ன புத்திமதி என்ன?

II. கடின பதங்கள்: **பயங்கரம்**, ஆங்கு, பரிவாரம், புசித்தல், கானகம், பலவீனம், வலிய, சம்பவம், அறவே, சாது, தயை, உளை, திகைப்பு, வஞ்சனை, **ஆலோசனை**.

III. மேலேயுள்ள சொற்களில் பெரும் எழுத்துக்களிலுள்ளவைகளைச் சொந்த வாக்கியங்களில் அமைக்கவும்.

IV. **இலக்கணம்:** ஒருவர் பேசும் வார்த்தைகளை நாம் அவ்வாறே எழுதவேண்டி யிருக்கிறது. சொற்களைப் பேசினபடியே எழுதிக்காட்ட ("....") இப் புள்ளிகளை இடுவது வழக்கம். இவைகளுக்கு "நேர்ப் பேச்சுக் குறிகள்" எனப் பெயர். இக்குறிகள் இப்பாடத்தில் வந்திருக்கும் இடங்களைக் கவனி.

பின்வரும் வாக்கியத்தில் நேர்ப்பேச்சுக் குறிகளையும் மற்றக் குறிகளையும் அமைக்கவும்.

1. புலி அவனைக் கூப்பிட்டு ஐயா பிராமணரே உமக்கு ஒரு பொற்காப்புத் தருகிறேன் வாரும் என்றது

2. சித்திரக்கிரீவன் தன் பரிவாரங்களைப் பார்த்துத் தீர ஆலோசியாமல் இதை நாம் புசிக்கலாகாது என்றது



## 6. பிட்டுக்கு மண் சுமந்தது

பிட்டுக்கு மண்சுமந்த பெம்மானென் றறியாமல்
ஒட்டனென்றே சொல்லி உத்தமனும் அப்போது,
கைப்பிடித்த பிரம்பதனைக் கரகரென்று தான்சுழற்றி
ஒட்டன் முதுகின்மேல் ஓங்கி யடித்தானே !
ஐயரந்தச் சொக்கருக்கு அந்த அடிபடவே,
வருத்தமிகக் கொண்டாரே மதுரை சொக்க நாதருமே.
அந்த அடியும்தான் அல்லவர்க்கும் பட்டதுவே !

அவரவர்கள் தம்முதுகில் அடித்தழும்பு நேர்ந்ததுவே !
திக்குத் திசைகள் தீவாந்தரங்கள் எல்லாம்,
அண்டங்கள் தீவுகள் ஆகாய மேவ்விடத்தும்,
சகலசீவ சேந்துக்கும் தழும்பு மிக உண்டாச்சு ;
பாண்டியன் முதுகின்மேல் பாரத்தழும் பாச்சு.
எல்லாரும் பயந்தார் இந்த அடியாலே,
பாண்டியன் அப்போது பயந்து நடுநடுங்கி,
'எங்கே அந்த ஒட்டன்' என்று ஏறெடுத்துப் பார்க்கும்போது,
எங்கேங்கும் தேடினனே எழில்மதுரைப் பாண்டியனும்.
காணுததினலே காவலன் அடி விழுந்தான்.
"வந்தவர் ஒட்டரல்லர், மாயாண்டிச் சோக்கராவர் ;
ஆண்டவராக வேண்டும், ஆளடிமை சேய்ய வந்தார் ;
தேரியாமற் போச்சு''தேன்று சிந்தை மிகவாடி,
'தீவினைக்கு ஆளானேம் தேய்வமேன்று பாராமல்;
இந்த விதிப்பயனை எப்போது தோலைத்திடுவோம் ?
வந்தது நமக்கு மதிமோசம்' என்று சோல்லி,
'எந்த விதத்திலேயும் ஈடேறப் போவதில்லை ;
தேரிந்தது நமக்'கேன்று தேன்மதுரைப் பாண்டியனும்
மேத்த விசனமாய் விடுதிக்கு வந்துவிட்டான்.

— மீன்னெளியாள் குறம்.

---

I. இப் பகுதி 'மின்னெளியாள் குறம்' என்ற ஒரு பழம் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. வந்தி என்ற ஒரு ஏழைக் கிழவிக்காகச் சோமசுந்தரக் கடவுள் கூலியாளாக வந்து வேலை செய்தார். இந்தக் கதையைத் தெரிந்துகொள்.

II. இப் பாடலில் வந்துள்ள பெயர்ச்சொற்களை எடுத்தெழுது.

III. இப் பகுதியில் வந்துள்ள கதையைப் பத்து வாக்கியங்களில் எழுது.

# 7. இயேசு கிறிஸ்து

**1.** நமது நாட்டில் கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய ஜனங்கள் அநேகர் இருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். இம்மதத்தை உலகத்தில் பெரும் பகுதியினர் தழுவியிருக்கின்றனர். இம்மதத்தை ஸ்தாபித்தவர் இயேசு கிறிஸ்து என்ற பெரியார். இவருடைய வாழ்க்கை வரலாற்றை நாம் அறிவது அவசியம்.

**2.** இன்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், மேற்கேயுள்ள **பாலஸ்தீனம்** என்னும் நாட்டில் **பெத்லகம்** என்ற கிராமத்தில் இவர் பிறந்தார். இவரது அன்னையின் பெயர் மரியாள்; இவள் யூதர் வகுப்பைச் சேர்ந்தவள்; இவளுடைய கணவன் பெயர் யோசேப்பு.

**3.** இயேசு பிறந்தபொழுது அநேக அதிசய சம்பவங்கள் நிகழ்ந்தன. இக் குழந்தையால் இடையூறு தனக்கு நேரும் என்று அந்நாட்டு அரசன் கருதினான். ஆகையால், நாட்டிலுள்ள குழந்தைகள் எல்லாரையும் கொலை செய்யுமாறு உத்தரவிட்டான். இதைக் கேட்ட இயேசுவின் பெற்றோர், குழந்தையை எடுத்துக் கொண்டு எகிப்து தேசம் சென்றனர். அவ்வரசன் இறந்த பின்னர் தம் தாய் நாட்டிற்குத் திரும்பினர்.

**4.** சில ஆண்டுகளில் இயேசு வாலிபப் பருவம் அடைந்தார். தமது சமூகத்திலிருந்த குறைபாடுகளை நீக்க முயற்சித்தார். கோயில்களில் நடைபெற்று வந்த

குறைகளை எடுத்துக் காட்டினர். தமது தெய்விக சக்தியால் பல அதிசயங்களை நிகழ்த்தினர். ஊமைகளைப் பேச அருளினர்; இறந்தவர்களை உயிர்பெறச் செய்தார்; நோயாளிகளின் நோய்களைத் தீர்த்தார்; பல அரிய உபதேசங்களைச் செய்தார். 'பிறருடைய நற்குணங்களையே கொள்ள வேண்டும்; அவர்களுடைய குற்றங்களைப் பாராட்டக்கூடாது' என்று போதித்தார். அவ்வாறே தாமும் ஒழுகினர். கடவுள் ஒருவரே என்றும், அவர் அரூபி என்றும், அவரையே யாவரும் வணங்கவேண்டும் என்றும் உபதேசித்தார். பன்னிரண்டு பேர் அவருடைய சீடர்களாயினர்.

**5.** இயேசுவின் கொள்கைகள் அக்காலத்துச் சில மக்களுக்குப் பிடிக்கவில்லை. அநேகர் இவருடைய தத்துவங்களை நம்பவில்லை. கோயில் அதிகாரிகளும் நாட்டு மன்னரும் இயேசுவைப் பகைத்தனர். நாட்டு வைதிகர்களும் இவருடைய புதிய கொள்கைகளை வெறுத்தனர். இவருடைய கொள்கைகள் தேசத்தில் பரவினல் குழப்பம் ஏற்படும் என்று அதிகாரிகள் கருதினர்கள். அவரைப் பிடித்து வந்து நியாய சபையில் விசாரித்தனர். நியாயாதிபதி அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படி தீர்ப்பளித்தார்.

**6.** என்ன கொடுமையான தீர்ப்பு! இயேசு நாதரோ இதற்கு அஞ்சுபவர்! **எருசலம்** என்னும் நகரத்தின் அருகே இருந்த மேட்டு நிலத்தில் ஒரு மரச் சிலுவையை நாட்டி அதில் இவரைச் சேர்த்துக் கட்டி

இரும்பு ஆணிகளால் அறைந்து கொன்றனர். இக் கொடுஞ் செயலைக் கண்டவர் கண்ணீர்விட்டுக் கதறினர்.

7. இயேசு நாதரோ, தாம் இறக்குமுன் இறைவனை வணங்கி, "பிதாவே! தாங்கள் செய்யும் கொடுமை இன்னதென்று இவர்கள் அறிந்துகொள்ளவில்லை; இவர்களுடைய குற்றத்தைப் பொறுத்து இவர்களை மன்னியுங்கள்" என்று பிரார்த்தித்தார். இவர் மனத்தின் மாண்புதான் என்னே? தன்னைக் கொல்லும் பகைவரிடத்தும் இரக்கம் காட்டிய அவரது கருணைக்கு ஈடு உண்டோ? அவருடைய தன்னலமற்ற சேவையும், அன்பின் பெருக்கும், சுயநலங்கருதா வாழ்க்கையும் மக்களுக்கு வழிகாட்டிகளே. உலக மகா புருஷர்களில் இயேசுநாதர் ஒரு சிறந்த ஸ்தானத்தை வகிக்கிறார்.

8. மரித்த மூன்றாம் நாள் இயேசு பெருமான் தமது சீடர்கள் முன் தோன்றிப் பல அற்புதங்களைச் செய்தார். இயேசுநாதருடைய வாழ்க்கையையும், அற்புதச் செயல்களையும், போதனைகளையும் 'பைபில்' என்ற நூல் விரிவாக விளக்குகிறது. இதுவே கிறிஸ்துவர்களின் வேத புத்தகமாகும்.

---

I. பாடத்தை மௌனமாகப் படி; பின்னர் கீழ்க்கண்ட கேள்விகட்கு விடைகள் எழுது :

1. கிறிஸ்துவ மதத்தை ஸ்தாபித்தவர் யார்?
2. குழந்தைப் பருவத்தை இயேசு எங்கே கழித்தார்?

3. இயேசு நாதரின் உபதேசங்கள் யாவை?
4. இவரை விரோதித்தவர் யார்?
5. நியாயாதிபதி இவருக்கு அளித்த தீர்ப்பு என்ன?
6. இறக்கும் பொழுது இயேசுநாதரின் வேண்டுகோள் என்ன?
7. 'பைபில்' என்பது என்ன?

II. **கடின பதங்கள் :** சம்பவம், நிகழ்ச்சி, பருவம், சமூகம், குறைபாடு, தெய்வீகம், அரூபி, தத்துவம், பகைமை, வைதிகர், வெறுப்பு, சிலுவை, மாண்பு, கருணை, பெருக்கு, சுயநலம்.

III. **எதிர்ப்பதங்களை எழுது :** விருப்பு, அன்பு, வைதிகர்.

IV. வேறு இரண்டு மத ஸ்தாபகர்களைப் பற்றி ஐந்தைந்து வாக்கியங்கள் எழுதுக.

V. **இலக்கணம் :**

'இயேசுநாதர் கொல்லப்பட்டார்.' 'நியாயாதிபதி தீர்ப்பளித்தார்.' இவை பூர்த்தியான கருத்துக்களையுடைய வாக்கியங்கள். இவற்றில் கொல்லப்பட்டார், அளித்தார் என்பவை வினைச்சொற்கள். யார் கொல்லப்பட்டார்? இயேசு நாதர்.

'இயேசு நாதர்' என்பது **எழுவாய்** ; 'கொல்லப்பட்டார்' **பயனிலை.** காரியம் செய்தது யார்? என்பதைக் காட்டுவது **எழுவாய்.** செய்த காரியத்தைக் குறிப்பது **பயனிலை.** இரண்டாம் வாக்கியத்தில் எழுவாய் எது? பயனிலை எது?

# 8. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

1. செந்நிறமுள்ள சிலுவையை அடையாளமாகக் கொண்டுள்ள ஒரு கூட்டத்தினருக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் என்று பெயர். பிறருக்கு உதவி செய்வதே இச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

2. ஐரோப்பாக் கண்டத்தில் சுமார் நூறு வருஷங்களுக்குமுன் ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அப் போரில் ஆயிரக்கணக்கான வீரர்கள் மாண்டனர்; அநேகர் காயம்பட்டுக் கிடந்தனர். சரியான சிகிச்சையின்றி இவர்களில் பலர் இறந்தனர்.

3. அச் சமயம் அவ்வழியே வந்த ஸ்வீடன் தேசத்து இளைஞர் ஒருவர் இக் கோரக் காட்சியைக் கண்டு மனம் வருந்தினர். அநேகருக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்தார். அவரால் தனிமையாகப் பலருக்கு உதவ இயலவில்லை. 'போர்க்களத்தில் காயம் பட்டு வருந்துவோர்களுக்கு உதவி செய்ய ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டும்' என்ற கருத்தை வெளியிட்டார். அதன் பிறகு பல நாட்டினர் ஒருங்கே சேர்ந்து ஒரு 'சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம்' ஏற்படுத்தினர்கள். பின்னர், பல நாடுகளில் இச் சங்கத்தின் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

4. சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தின்பொழுது, இளைஞர்களுக்காக, இச் சங்கத்தின் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதற்கு '**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**' என்று பெயர். இளைஞர்கள் இச் சங்கத்தில்

சேர்ந்து, போரில் காயம் பட்டவர்களுக்குத் தங்களா லியன்ற உதவிகளைச் செய்தனர். இவ் வியக்கம் ஸ்திர மாக ஸ்தாபிக்கப்பட்டு, இப்பொழுது உலக முழுதும் பரவி இருக்கிறது.

5. இச் சங்கங்களெல்லாம் சாதி, மத, நிற வேறு பாடுகளின்றி எல்லாத் தேச மக்களுக்கும் தொண்டு புரிகின்றன. இவற்றில் சேர்ந்தால் மனிதர்களுக்குள் உள்ள வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். பிற ருக்கு உதவி செய்தல், ஏழை எளியவர்பால் அனுதாபம் கொள்ளுதல், துன்புற்றவர்களுக்கு நன்மை செய்தல், நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்தல் முதலானவை களே இச் சங்கங்களின் முக்கிய நோக்கங்களாகும். இளைஞர் சங்கங்களின் முக்கிய நோக்கங்களில் முதலா வது, யாவருடனும் சகோதரபாவத்துடன் ஜாதி, மத பேதங்களின்றி இருத்தல்; இரண்டாவது, பிறர் நல னுக்கு உழைத்தல்; மூன்ருவது, தங்களுடைய சுகா தார அறிவையும் பழக்கத்தையும் விருத்தி செய்தல் ஆகும்.

6. இளைஞர் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் நற்பழக்கங்களை அனுசரிப்பவர்கள். தங்கள் தேக சுகத்தில் முதல் கவனம் செலுத்த வேண்டியவர்கள். பின்னர் தங்கள் பாடசாலைகள், வீடுகள் முதலியவை களின் சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டியவர்கள். காயம் பட்டவர்களுக்கு 'முதல் உதவிச் சிகிச்சை' செய்ய வும் இவர்களுக்குக் கற்பிக்கப்படும்.

**7.** இச் சங்கங்கள் அநேகமாகப் பாடசாலைகளில் ஏற்படுத்தப்படுகின்றன. இவற்றில் மாணவர்கள் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். இவர்களுக்கு ஆலோசனை யாளர்களாக ஆசிரியர்கள் ஏற்படுத்தப்படுவார்கள். இம் மாணவர்களே இச் சங்கங்களை நடத்துவார்கள். சுகாதார நோக்கங்களைப் பூர்த்தி செய்ய உதவுவதுடன், அந்நியநாட்டு இளைஞர்களுக்குத் தம்நாட்டு விசேஷங்களைப் பற்றிக் கடிதங்கள் எழுதுவார்கள். அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில்கள் வாயிலாகத் தங்களுடைய அறிவை விசாலித்துக் கொள்ளுவதுடன், சர்வதேச நேசத்தை வளர்க்கவும் உதவுகின்றனர்.

**8.** பரந்த நோக்கமும் உயர்ந்த செயல்களும் நிறைந்த இச் சங்கத்தைச் சேர்ந்து நாம் உலகத்தவர்க்கு உதவி செய்ய வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும்.

---

I. 1. செஞ்சிலுவைச் சங்கம் எவ்வாறு ஆரம்பமாயிற்று?
2. இச்சங்கத்தின் நோக்கங்களென்ன?
3. இளைஞர் சங்கத்தின் நோக்கங்களென்ன?
4. இதிலுள்ள இளைஞர்கள் எவ்வாறு தங்கள் அறிவை விசாலித்துக் கொள்ளுகின்றனர்?

II. கடின பதங்கள் : மாண்டனர், சிகிச்சை. இளைஞர், இயல், ஸ்திரம், வேறுபாடு, தொண்டு, அனுதாபம், சுகாதாரம், உறுப்பினர், ஆலோசனையாளர், அந்நிய, அத்தியாவசியம்.

III. உன் பாடசாலையில் ஒரு இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று தலைமை ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுது.

IV. இலக்கணம்: கீழுள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலைகளை எடுத்து எழுதுக:

1. கணேசன் செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்தான்.
2. நாம் நமது தேக சுகத்தை முதலில் கவனிக்க வேண்டும்.
3. என் பாடசாலையில் இச் சங்கத்தை ஸ்தாபித்தேன்.
4. மாணவர்களே இச் சங்கங்களை நடத்துகின்றனர்.
5. இச் சங்கம் யுத்த காலத்தில் உபயோகப்படுகிறது.

## 9. நவராத்திரி

**1.** நமது நாட்டில் வருடந்தோறும் கொண்டாடப்படும் பண்டிகைகளில் 'நவராத்திரி' முக்கியமான பண்டிகை. இப்பண்டிகைக்காகப் பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை விடப்படும். 'நவராத்திரி' என்றால் 'ஒன்பது இரவுகள்' என்று பொருள்.

**2.** இப்பண்டிகை இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி மாதம் அமாவாசைக்குப் பிறகு நவமிதிதி வரையில் தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. பத்தாவது நாளையும் சேர்த்து இதனைத் 'தசராப் பண்டிகை' என்றும் சொல்லுவார்கள்.

3. இவ்வுலகத்தைப் பரிபாலிப்பவர் கடவுள். அவர் மூன்று விதமான தொழில்களை நடத்துகிறார். அவை ஆக்கல், அளித்தல், அழித்தல் என்பன. பிரமன் என்ற ரூபத்தில் சகல ஜீவராசிகளையும் படைக்கிறார்; விஷ்ணு ரூபத்தில் இரட்சிக்கிறார்; உருத்திர ரூபத்தில் அழிக்கிறார். இக்கடவுளர்களின் சக்திகளை அவர்கள் மனைவிகளாகிய சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை என்கிறோம்.

4. இவர்களில் கலைவாணியே கல்விக்கு அதிதேவதை; இலக்குமி செல்வத்திற்கு அதிபதி; துர்க்கை வீரத்திற்குத் தலைவி. மக்களுக்குக் கல்வி, செல்வம், வீரம் அளிக்க வல்லவர்கள் இம்மூன்று தேவிகளே. இவைகளைப் பெறவே, இப்பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

5. இப்பண்டிகை ஒன்பது தினங்கள் நடைபெறும். முதல் மூன்று தினங்களில் ஜனங்கள் துர்க்கா தேவியைப் பூசிப்பார்கள்; அடுத்த மூன்று நாட்களில் இலக்குமியைத் தொழுவார்கள்; கடைசி மூன்று நாட்களில் கலைவாணியை வழிபடுவார்கள்.

6. இந்த நாட்களில் மூன்று தேவிகளின் படங்களையும் கொலுவில் வைத்துப் பூசை செய்வார்கள். இக்கொலுவில் வேறு அநேக பதுமைகளையும், அதிசயப் பொருள்களையும் வைத்துக் கொலுமண்டபத்தை அலங்கரிப்பார்கள். பதுமைகளுக்கு ஆபரணங்கள் பூட்டுவார்கள்; பட்டாடைகள் உடுத்துவார்கள்; கொலு

வைத் தீபங்களினால் அலங்காரம் செய்வார்கள். மாலை யில் பெண்கள் பிறர் வீடுகளுக்குச் சென்று, கொலு மண்டபங்களைக் கண்டு களித்துத் தத்தம் இல்லங்களுக் குத் திரும்புவார்கள்.

7. இவ்வாறு எட்டு நாட்கள் கழிந்த பிறகு, ஒன்ப தாம் நாள் தத்தமக்கு மிகவும் இன்றியமையாத பொருள் களைக் கொலுவில் வைத்து அவைகளுக்குப் பூசை புரி வார்கள். கல்வியில் ஊக்க முடையவர்கள் தங்கள் புத்த கங்களைப் பூசிப்பர்; தொழி லாளர்கள் தங்கள் ஆயுதங் களைப் பூசிப்பர். இத்தினம் சரஸ்வதி பூஜை அல்லது ஆயுத பூஜை என்று வழங் கப்படுகிறது.



8. இப்பண்டிகை தொ ன்றுதொட்டு நமது நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. பண்டைக் காலத்தில் இந்து அரசர்கள் இதை வெகு சிறப்பாகக் கொண்டாடி வந்தனர். இப் பொழுதும் மைசூர், திருவாங்கூர், புதுக்கோட்டை முதலான சுதேச இராச்சியங்களில் இப்பண்டிகை சிறப் பாகக் கொண்டாடப்படுகிறது. மைசூரில் நடைபெறும்

விழாவிற்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான ஜனங்கள் செல்லுகின்றனர். மைசூர் அரசர் தம் பட்டத்து யானையின்மீது பவனி வருவார்; கொலு வீற்றிருப்பார்; விருதுகளும் பட்டங்களும் தக்கோருக்கு வழங்குவார்; கல்வி, சங்கீதம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளில் வல்லோருக்கும் பரிசுகள் வழங்குவார். மன்னர் அரண்மனையும், நகரத்தெருக்களும், ஆலயங்களும், பொதுக்கட்டிடங்களும், மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

9. பத்தாவது தினத்தை வெற்றி பொருந்திய நாளெனக் கொண்டாடுகின்றனர். அத்தினம் 'விஜய தசமி' எனப் பெயர் பெறும். அந்நாளே குழந்தைகளுக்குக் கல்வி ஆரம்பிக்க நன்னாளாகும். மேலும், நற்காரியங்களை ஆரம்பம் செய்ய அத்தினமே நல்லதெனக் கருதுகிறோம்.

---

I. கேள்விகள்:

1. நவராத்திரி ஏன் கொண்டாடப்படுகிறது?
2. மும்மூர்த்திகளின் தொழில்கள் யாவை?
3. நவராத்திரிக் காலத்தில் யாருக்குப் பூசை செய்கின்றனர்?
4. எவ்வாறு பூசை செய்கின்றனர்?
5. ஆயுதபூசை யன்று என்ன செய்வார்கள்?
6. மைசூரில் நவராத்திரி எவ்வாறு கொண்டாடப்படுகிறது?
7. 'விஜயதசமி' எப்படி நல்ல நாள்?

II. கடினபதங்கள் : பரிபாலனம், ஆக்கல், அளித்தல், ஜீவ ராசிகள், படைத்தல், இரட்சித்தல், தலைவி, அதிபதி, இல்லம், தொன்றுதொட்டு, விருது, தக்கோர், ஓவியம்.

III. நீ சரஸ்வதி பூஜை'யன்று செய்தவற்றைக் குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

IV. இலக்கணம் :

நாள், பண்டிகை, இரவு — இவை ஒவ்வொன்றும் ஒரு எண்ணிக்கையைக் குறிக்கின்றன. ஒன்றைக் குறிக்கும் சொல் **ஒருமை** எண் எனப்படும்.

நாட்கள், பண்டிகைகள், இரவுகள் — இவை இரண்டையும் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைகளையும் குறிக்கின்றன. இவை **பன்மை** எண்கள் எனப் பெயர்.

வினைச்சொற்களுக்கும் ஒருமை, பன்மை உண்டு. விளக்கு எரிகிறது; விளக்குகள் எரிகின்றன. எரிகிறது — ஒருமை; எரிகின்றன — பன்மை.

**பயிற்சி :** கீழுள்ள வாக்கியங்களில் பெரிய எழுத்துக்களி லுள்ளவற்றைப் பன்மையாக மாற்றி அவற்றைத் திருத்தி அமைக்கவும்.

1. **பையன்** படிக்கிறான்.
2. **காட்டில்** புலி வசிக்கும்.
3. **வீட்டில்** பண்டிகை கொண்டாடுகிறோம்.
4. **பெண்** கும்மி அடிக்கிறாள்.
5. **ரோஜாப்பூ** மணமுள்ளது.



# 10. புலிக் கூடு

1. பந்த மேரியு தோடி ? — கண்களைப்
   பார்க்க நடுங்குதடி
   குந்தம் வாளீட்டி யெல்லாம் — கூடவே
   கோண்டு திரியுதடி.

2. வாயைப் பிளக்குதடி — கையுறை
   வாளும் உருவுதடி
   பேயைப் படைத்த பின்னே — இதனையும்
   பிரமன் படைத்தானடி ?

3 இடித்து முழங்குதடி — தோண்டையும்
   இரும்பாலே செய்ததோடி
   அடுத்து நெருங்காதேடி — அது மிக
   ஆங்காரம் கோள்ளுதடி.

4. கூட்டி லடைத்திடினும் — இரையினைக்
கொண்டு கொடுத்திடினும்
காட்டில் வளர்ந்த குணம் — புலிகளும்
காட்டா திருக்குமோடி ?

5. புன்னைப் புதுமலரும் — குவளையின்
பூவுங் கலந்தது போல்
மின்னி மிளிரும் உடல் — கொடிய இவ்
வேங்கைக்கும் வேண்டுமோடி ?

6. மானைப் படைத்த தெய்வம் — புலியையும்
வளர்த்து விடலாமோடி ?
தேனைப் பழித்த சொல்லாய் ! — எனக்கு நீ
தெரிந்துரை செய்வாயோடி ?

— ஸ்ரீ. தேசிக் விநாயகம் பிள்ளை.

---

I. கடினபதங்கள் : குந்தம், கையுறை, பிரமன், ஆங்காரம், இரை, குவளை, மிளிரும்.

II. இரை, இறை ; எரி, எறி ; கரை, கறை ; அரம், அறம் ; இவற்றின் வித்தியாசங்களைத் தெரிந்துகொள்.

III. இப் பாடலை இயற்றியவர் தமிழ்க்கவிஞர் ஸ்ரீ தேசிகவிநாயகம் பிள்ளை ஆவர். இவர் அநேக பாடல்கள் இயற்றி இருக்கிறார். அவற்றில் சிலவற்றை மாணாக்கர்கள் படிப்பது நலம்.

# 11. வேடனும் புறாக்களும் – II

1. சித்திரக்கிரீவனுடைய மொழிகளைக் கேட்ட ஒரு புறா, மிகவும் கர்வத்துடன் மற்றப் புறாக்களைப் பார்த்து, "இந்த விதமாக நாம் ஆலோசித்தோமானால் நமக்கு இரையே அகப்படாது. தீராச் சந்தேகம் கொண்டவர்கள் என்றும் துக்கத்தையே அனுபவிப்பார்கள்" என்றது.

2. இதைக் கேட்ட மற்றப் புறாக்கள் சந்தோஷங் கொண்டு, பறந்து கீழே சென்று, தானியங்களைத் தின்னும் பொருட்டு வலையில் அமர்ந்து அகப்பட்டுக் கொண்டன.

3. இதைக் கண்ட புறா அரசன் மிகுந்த வருத்தங் கொண்டு, "என் இனத்தார் யாவரும் அகப்பட்டுக் கொண்ட பின்னர், நான் மட்டும் தனியாக இருப்பதால் பயன் என்ன?" என்று எண்ணித் தானும் வலையில் அகப்பட்டுக்கொண்டது.

4. வேடன் களிப்படைந்து, மறைவிடத்தை விட்டுப் புறாக்களின் அருகே வரத்தொடங்கினான். அதைக் கவனித்த புறாக்கள், தங்கள் அரசனைப் பார்த்து, "உமது யோசனையைக் கேட்காமல் போனதனால், ஏற்பட்ட பலன் இது" என்று வருத்தப் பட்டன.

5. சித்திரக்கிரீவன், "இனி நாம் சென்றதை நினைத்து வருத்தப்படுவதில் பயன் இல்லை. நான்

ஒரு உபாயம் சொல்லுகிறேன். நாம் எல்லோரும் வலையுடன் கூடப் பறந்து செல்லலாம். இன்றேல் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது," என்று சொல்லிற்று.

6. உடனே, எல்லாப் புருக்களும் வலையோடு பறந்து சென்றன. அவை மறையுமட்டும் வேடன் பின்னல் சென்று, வலையை யிழந்த வருத்தத்துடன்



வீடு திரும்பினன். புரு அரசன், புருக்களைப் பார்த்து, "கண்டகி நதி தீரத்தில் உள்ள சித்திரவனத்தில் இரணியகன் என்ற எலியரசன் வசிக்கிருன். அவன் என் சிநேகிதன். அவனிடம் சென்ருல், வலையை அறுத்து நம்மை விடுவிப்பான்" என்றது

7. இந்த யோசனையை எல்லாப் புருக்களும் ஆமோதித்தன. அங்கே பறந்து சென்று, சிறிது

நேரத்தில் எலியரசன் வளையருகில் இறங்கின. சித்திரக்கிரீவன், உள்ளே இருந்த எலி அரசனைக் கூவியழைத்தது. தன் நண்பன் குரலைக் கேட்ட இரணியகன் வளையைவிட்டு வெளியே வந்து புருக்களை உபசரித்தது.

8. இரணியகன், புருக்கள் படும் துன்பத்தைக் கண்டு துக்கித்து, சித்திரக்கிரீவனை நோக்கி, "நண்பா! சமர்த்தனாகிய நீ எவ்வாறு இந்த விபத்தில் அகப்பட்டாய்?" என்று வினவிற்று.

9. சித்திரக்கிரீவன், "விதியை வெல்ல யாரால் முடியும்? நேசா! எங்கள் வலைக்கயிற்றை அறுத்துவிடு" என்று கேட்டுக்கொண்டது. உடனே புரு அரசன் கட்டுண்டிருந்த கயிறுகளை எலி அரசன் அறுக்கத் தொடங்கிற்று.

சித்திரக்கிரீவன், "நண்பா! முதலில் என் பரிவாரத்தினுடைய தளைகளை நீக்கிப் பின் என் கயிற்றைத் துணி" என்று கேட்டுக்கொண்டது.

இரணியகன், "நேசா! என் பற்களில் பலம் குறைவு. ஒவ்வொருடைய தளைகளையும் தனித்தனியேதான் என்னால் நீக்கமுடியும். நீ அரசனாகையால், உன்னை முதலில் விடுவித்துப் பிறகு உன் பரிவாரத்தை விடுவிப்பேன்" என்று பதிலளித்தது.

இது கேட்ட புரு அரசன், "அரசனாகிய நான் இவர்களைப் பரிபாலிக்க வேண்டியவன். ஆகையால், முதலில் அவர்களை விடுவிக்க வேண்டும். இதுவே தருமம்" என்றது.

இரணியகன் "நண்பனே! உன் நோக்கம் உயர்ந்தது. நீ விசுவாசிக்கத் தகுந்தவன்" என்று சிலாகித்து எல்லோருடைய பாசங்களையும் அறுத்துக் கடைசியாகப் புரு அரசின் தளைகளையும் துணித்தது.

10. புருக்கள் சந்தோஷமடைந்து இரணியகனைத் தழுவிக்கொண்டு பிரியவசனங்களால் உபசரித்தன. பின்னர், அவை பறந்து தம் இருப்பிடம் சென்றன.

---

I. கடினபதங்கள் : அனுபவம், வருத்தம், உபாயம், ஆமோதித்தல், விபத்து, வெல்லுதல், துணித்தல், தளை, பாசம்.

II. இக் கதையின் இரண்டு பாகங்களையும் நடித்துக் காட்டுக.

III. கேள்விகள் :

1. கர்வங்கொண்ட புருவின் யோசனை என்ன?
2. புருக்கள் எவ்வாறு வலையில் அகப்பட்டன?
3. வேடனிடமிருந்து தப்ப என்ன உபாயத்தைச் செய்தன?
4. புருக்களின் தளைகளை யார் விடுவித்தது?
5. தன்னை முன்னால் விடுவித்துக்கொள்ள ஏன் சித்திரக்கிரீவன் விரும்பவில்லை?
6. புருக்கள் எவ்வாறு தம் சந்தோஷத்தைக் காட்டின?

IV. இலக்கணம் : கீழுள்ளவற்றில் எழுவாய் பயனிலை கண்டுபிடி :

1. புருக்கள் வலையுடன் பறந்து சென்றன.

2. வேடன் வலையை விரித்தான்.
3. சித்திரக்கிரீவன் ஆலோசனை செய்தது.
4. இரணியகன் புறாக்களை விடுவித்தது.
5. வேடன் வருத்தத்துடன் வீடு சென்றான்.

V. கோடிட்ட இடங்களில் தகுந்த எழுவாய்களை அல்லது பயனிலைகளை அமைக்கவும்.

1. ——— வருத்த மடைந்தன.
2. புறாக்கள் வலையில் ———.
3. ——— இரணியகனைத் தேடிச் சென்றன.
4. புறாக்களைக் கண்டு ——— வருத்தப்பட்டான்.
5. இரணியகன் வலையை ———.

# 12. மின்சாரம்

1. இக்காலத்தில் நாம் பல ஆச்சரியங்களைப் பார்க்கின்றோம். எண்ணெயும் திரியும் இல்லாமல் பிரகாசத்துடன் எரியும் ஒருவகை விளக்குகளைக் காண்கிறோம். பேசும் படங்களில் உயிரற்ற சித்திரங்கள் பாடுவதையும் ஆடுவதையும் பேசுவதையும் பார்த்தும் கேட்டும் ஆனந்திக்கிறோம். வெகு தூரத்திலிருந்து வரும் செய்திகளையும் சங்கீதங்களையும் 'ரேடியோ' மூலமாகக் கேட்டு அனுபவிக்கிறோம். இவ்வரிய வேலைகள் யாவும் 'மின்சாரம்' என்னும் ஒருவகைச் சக்தியினால் செய்ய முடிகிறது.

2. மின்சார சக்தியை நாம் காணமுடியாது. ஆனால், அதன் தன்மையை ஒருவாறு அறியலாம். ஆகாயத்தில் மேகங்கள் ஒன்றோடொன்று உராய்வதால் ஏற்படும் மின்னலுக்கும், மின்சார சக்திக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. இந்தச் சம்பந்தத்தை உபயோகித்துக் கட்டடங்கள் இடிவிபத்தினின்றும் காக்கப்படுகின்றன.

3. மின்சாரத்தை உபயோகித்துப் பல அற்புதங்கள் செய்யப்படுகின்றன. இச் சக்தியால் இரயில்வண்டிகள் ஓட்டப்படுகின்றன ; ஆலைகளில் இயந்திரங்கள் இயங்குகின்றன ; விசிறிகள் சுற்றுகின்றன ; விளக்குகள் எரிகின்றன ; வீடுகளில் சமையலும் செய்யப்படுகிறது. இவைகளின்றி இன்னும் அநேக அற்புதங்களும் இச்சக்தியினால் செய்யப்படுகின்றன. அவைகளில் தந்தித் தபால், 'டெலிபோன்' என்ற தூர சம்பாஷணைக் கருவி, சிகிச்சை செய்ய உதவும் எக்ஸ்-ரே என்ற கருவி, ரேடியோ என்பவைகள் மிகச் சிறந்தவை.

4. ஒரு ஊரிலிருந்து மற்றோரூருக்கு விரைவாகச் செய்திகளைத் தெரிவிக்கத் தந்தி யடிக்கிறோம். இத் தந்தியும் மின்சாரத்தின் உதவியால்தான் குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்குச் செல்லுகிறது. தந்தியின் உதவியில்லாமல் உலகெங்கும் செய்திகள் அனுப்பவும் மின்சாரமே காரணம். இதைக் கம்பியில்லாத் தந்தி அல்லது 'வயர்லெஸ்' என்று சொல்லுவார்கள். இக்கருவியின் உதவியால், ஆகாயத்தில்

பறப்பவர்களோடும், கடலில் பிரயாணம் செய்பவர்களோடும், இரயில் வண்டிகளில் யாத்திரை செய்கின்றவர்களோடும் சம்பாஷிக்கலாம். 'டெலிபோன்' மூலமாகவும் இச் சக்தியினுலேயே பேசலாம். பத்திரிகைகளுக்குச் செய்திகள் தந்திகள் மூலமாக மின்சாரத்தின் உதவியால் வருகின்றன. 'எக்ஸ்-ரே' என்னும் கருவியின் உதவியால், நம் உடல் உறுப்பின் உள் அமைப்பை அறிந்து தகுந்த சிகிச்சை செய்ய, மருத்துவர்களுக்கு உதவியாக மின்சாரம் வேலை செய்கிறது. 'ரேடியோ' என்ற ஒலி பரப்பும் கருவியும் மின்சாரத்தின் வேலையே. இவைகளேயன்றி மின்சாரமணிகள், மாடிகளில் ஏறி இறங்க மின்சாரத் தொட்டில்கள், மின்சார அடுப்புகள், மின்சாரக் கடிகாரங்கள், மின்சாரத் தையல் இயந்திரங்கள் என்ற அநேக சாதனங்கள் வழங்கி வருகின்றன.

5. இவ்வாறு பெரிதும் உபயோகமுள்ள இச்சக்தி நீர் வீழ்ச்சிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது. நீர் வீழ்ச்சிகளில் பல பெரிய இயந்திரங்கள் வேலை செய்து மின்சாரத்தை ஏராளமாகத் தயார் செய்கின்றன. இச் சக்தியை ஆங்காங்கு தேவைக்குத் தகுந்தபடி அனுப்ப உபயோகப்படுத்துகின்றனர். தென்னிந்தியாவில் பைகாரா, மேட்டூர், சிவசமுத்திரம் முதலிய இடங்களில் ஏராளமான மின்சார சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. இது துரைத்தனத்தாரின் மேற்பார்வையிலேயே நடைபெறுகின்றது. சில இடங்களில் நீர் வீழ்ச்சிகள் இன்றி, இயந்திரங்கள் மூலமாகவும் இச் சக்தி தயார் செய்யப்படுகிறது.

6. மேல் நாடுகளில் அநேக நாகரிக வசதிகள் இச்சக்தியால் செய்யப் படுகின்றன. 'மின்சார நாற் காலி'களில் உட்காரவைத்து, கொலைத் தண்டனை அடைந்த குற்றவாளிகள் கொல்லப்படுகின்றனர். தோட்ட வேலைகளிலும், பயிர்த்தொழிலிலும் மின் சாரம் அதிகமாக உபயோகிக்கப் படுகிறது. இதன் உதவியால் கிராமங்களில் குடிசைத் தொழில்கள் நடை பெறுகின்றன.

7. நமது நாட்டில் மின்சாரத்தின் உபயோகத்தை ஜனங்கள் இன்னும் அதிகம் உணரவில்லை. இச்சக்தி கிராமங்களிலும் பரவி ஏழைகளிடையிலும் பரவ வேண்டும். இந்த நோக்கத்தைக் கொண்டே, மின் சாரத்திற்கென் ஒரு தனி இலாகாவைத் துரைத்தனத் தார் ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

8. இவ்விருபதாம் நூற்றாண்டில் மனித வாழ்க் கைக்கு இன்றியமையாதது மின்சார சக்தியே. இதைக் கையாளுவதில் நாம் வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இன்றேல், உயிருக்கு அபாயம் நேரிடும். ஆகையினால், மின்சாரம் உற்பத்தியாகும் இடங்களி லும், பரவும் இடங்களிலும் 'அபாயம் — எச்சரிக்கை' என விளம்பரம் செய்திருக்கின்றனர்.

---

1. கடின பதங்கள்: ஆச்சரியம், பிரகாசம், தன்மை, உராய் தல், அற்புதம், இயங்குதல், விரைவு, செய்தி, சாத னம், மேற்பார்வை, உணர்தல், இலாகா, நூற்றாண்டு, உற்பத்தி, எச்சரிக்கை, விளம்பரம்.

II. கேள்விகள் ;

1. கட்டடங்கள் இடிவிபத்தினின்று எவ்வாறு காக்கப் படுகின்றன ?
2. மின்சாரத்தால் செய்யப்படும் அற்புதங்கள் யாவை ?
3. 'கம்பியில்லாத் தந்தி'யின் உபயோகங்கள் யாவை ?
4. 'எக்ஸ்-ரே' என்ற கருவியின் வேலை என்ன ?
5. மின்சாரம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது ?
6. மேல் நாடுகளில் இதை எவ்வாறு உபயோகிக்கின்றனர் ?
7. தென்னிந்தியாவில் மின்சாரம் எங்கே உற்பத்தி செய்யப்படுகிறது ?

III. நீ வசிக்கும் கிராமத்தில் மின்சார விளக்குகள் போட வேண்டும் என்று கிராமப் பஞ்சாயத்து சபைத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுது.

IV. இலக்கணம்: (1) 'வா' என்ற சொல்லைக் கொண்டு பின்வரும் வாக்கியங்களில் பயனிலைகளை அமைக்கவும்.

| | | |
|---|---|---|
| நான் ______ | அது ______ | அரசன் ______ |
| நீ ______ | நாங்கள் ______ | ஜனங்கள் ______ |
| அவன் ______ | அவர்கள் ______ | மாடுகள் ______ |
| அவள் ______ | அவை ______ | எருது ______ |

(2) கோடிட்ட இடங்களில் தகுந்த எழுவாய்களை அமைக்க :

| | | |
|---|---|---|
| ______ பிடித்தேன் | ______ பிடித்தோம் | ______ பிடிக்கிறார்கள் |
| ______ பிடித்தாள் | ______ பிடித்தான் | ______ பிடிக்கிறது |
| ______ பிடித்தாய் | ______ பிடித்தீர்கள் | ______ பிடிக்கின்றன |

# 13. சுவாமி விவேகானந்தர்

1. வங்காளத்தின் தலைநகரம் கல்கத்தா. அங்கே, சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் **விசுவநாத தத்தர்** என்ற பிராமணர் நியாயவாதியாக இருந்தார். அவர் **புவனேசுவரி** என்ற பெண்மணியுடன் இல்லறம் நடத்திவந்தார். இத் தம்பதிகள் சிறந்த தெய்வ பக்தியுடையவர்கள். இவர்களுடைய குலதெய்வம் காசி விசுவநாதர்; அவரைத் தினந்தோறும் பூசித்து வந்தனர்.

2. அவர்களுக்கு 1863-ஆம் ஆண்டில் ஜனவரித் திங்களில் ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு **வீரேசுவரன்** எனப் பெயரிட்டனர். ஆனால், எல்லோரும் அக்குழந்தையை **நரேந்திரன்** என்றே அழைக்கலாயினர்.

3. இளமையிலிருந்தே நரேந்திரர் ஊக்கத்துடன் கல்விகற்க ஆரம்பித்தார். தமது பதினெட்டாவது வயதில் பி. ஏ. பட்டமும் பெற்றார். தந்தையைப் போலவே அவரும் நியாயவாதியாக வேண்டும் என்று சுற்றத்தார் யாவரும் விரும்பினர். ஆனால், அவர் மனது உலகவாழ்க்கையில் செல்லவில்லை. உயர்ந்த தத்துவ விசாரங்களிலேயே தமது நேரத்தைக் கழித்தார். நமது வேதாந்த சாஸ்திரங்களையும் புராண இதிகாசங்களையும், சரித்திரத்தையும் ஆராய்ந்து, நம் நாட்டின் பெருமைகளை அறிந்தார்.

4. நரேந்திரருக்குக் கடவுளை அறியவேண்டும் என்ற அவா ஏற்பட்டது. வேதாந்த சந்தேகங்களை விளக்கத்தகுந்தவர் அவருக்குக் கிடைக்கவில்லை. அப்பொழுது, கல்கத்தாவுக்கு அருகே, காளிகட்டத்தில் **இராமகிருஷ்ண பரமஹம்ஸர்** என்ற ஒரு பெரியார் இருந்தார். இவர் காளிதேவியின் பரமபக்தர்; முற்றும் துறந்த ஞானி; பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் கல்விகற்றவரல்லர்; ஆனால், புத்திசாதுர்யம் நிறைந்தவர். இவரைக் காண, நரேந்திரர் ஒருநாள் காளிகட்டம் சென்றார்.

5. நரேந்திரர், அழகிய தேக அமைப்பும் முகவிலாசமும் உடையவர்; அவர் குரல் வெகு இனிமையானது; சங்கீதத்திலும் வல்லவர். இவரைக் கண்ட பரமஹம்ஸர் மகிழ்ச்சியடைந்தார். நரேந்திரருடன் சிறிதுநேரம் சம்பாஷித்தார்; பின் அவரைப் பாடச்சொல்லிக் கேட்டு, அந்த இனிய கானத்தில் மயங்கிவிட்டார். நரேந்திரருக்குப் பரமஹம்ஸரிடத்தில் தன்னையும் மீறி ஒரு பற்று ஏற்பட்டது. அடிக்கடி அவரைச் சந்தித்துத் தம் சந்தேகங்களைக் கேட்பார். அவருடைய விடைகள் இவருடைய சந்தேகங்களை நிவர்த்தித்தன.

6. நரேந்திரர் சிறிது காலத்தில் மனத்தெளிவு பெற்று, பரமஹம்ஸரின் சீடரானார். "இச்சீடன் மூலம் இந்தியாவின் பெருமையையும் இந்துமதத்தின் சிறப்பையும் உலகம் உணரும்" என்று பரமஹம்ஸர் மன

அமைதி அடைந்தார். சிலநாட்களுக்குப் பின் அவர் சமாதியடைந்தார். அவ்விடத்தில் நரேந்திரர் முயற்சியால், அவர் ஞாபகார்த்தமாக, ஒரு மடம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் நோக்கம், இந்துமத உண்மைகளை எங்கும் பரவச்செய்ய வேண்டும் என்பதே. இதற்கு 'இராமகிருஷ்ண மடம்' எனப் பெயர். இப்பொழுது இதன் கிளைகள் அநேக நாடுகளில் விளங்குகின்றன.

7. பிறகு, '**விவேகானந்தர்**' என்ற பெயருடன் நரேந்திரர் துறவறம் பூண்டார். இமயமலைக் குகைகளில் சிலகாலம் தவம்செய்தார்; திபேத்து தேசத்தில் புத்தமத ஆராய்ச்சி செய்தார்; திரும்பிவந்து கால் நடையாகவே இந்தியாமுழுவதும் யாத்திரை செய்து, இந்துமதக் கொள்கைகளைப் பற்றிப் பல நகரங்களில் பிரசங்கம் செய்தார். அப்பொழுது சென்னையிலும் சிலகாலம் தங்கினார். அங்கிருந்து, சென்னைவாசிகள் செய்த பொருளுதவியால் அமெரிக்கா சென்றார்.

8. அமெரிக்காவில் தமது வாக்கு வன்மையாலும், புத்திசாதுரியத்தாலும், வசீகர குணங்களாலும் அத்தேச மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். அச்சமயம் அங்கு நடைபெற்ற சர்வமத மகாநாட்டில் இந்துமதத்தின் சார்பாக அவர் செய்த பிரசங்கத்தைக் கேட்ட பலரும் அவரைக் கொண்டாடினர். அங்கிருந்து தம் தாய்நாட்டிற்குத் திரும்பினார்.

9. அக்காலத்தில், நமது தேசத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அப்பெரியார் பஞ்ச நிவாரண

வேலையில் ஈடுபட்டு அநேகரைக் காப்பாற்றினர். இவர் 1902-ஆம் ஆண்டில் ஜூலை மாதத்தில் சமாதியடைந்தார். இவர் ஏற்படுத்திய திட்டங்கள் இன்றுவரை நடைபெற்று வருகின்றன. இந்துமதத்தின் பெருமையை உலகினருக்குத் தெரிவித்து நமது நாட்டிற்குப் புகழை யளித்த இம்மகானை நாம் போற்ற வேண்டும்.

---

I. கடின பதங்கள்: தலைநகரம், இல்லறம், தம்பதிகள், குலதெய்வம், திங்கள், தத்துவம், விசாரம், அவா, முகவிலாசம், கானம், பற்று, நிவர்த்தி, சமாதி, வாக்குவன்மை, வசீகரம், பஞ்சம், நிவாரணம், திட்டம், மகான்.

II. கேள்விகள்:

1. நரேந்திரருடைய தாய் தந்தையர் யாவர்?
2. விவேகானந்தருடைய முதற் பெயர் என்ன?
3. நரேந்திரர் எவ்வித வாழ்க்கையில் இச்சைகொண்டார்?
4. இராமகிருஷ்ணருடைய குணங்கள் என்ன?
5. பரமஹம்ஸர் எவ்வாறு மன அமைதி அடைந்தார்?
6. துறவறம் பெற்ற விவேகானந்தர் என்ன செய்தார்?
7. அமெரிக்காவில் விவேகானந்தர் செய்த வேலை என்ன?
8. இராமகிருஷ்ணருடைய ஞாபகார்த்தமாக என்ன ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது?

III. இலக்கணம்: முன் பாடங்களில் கொடுக்கப்பட்ட பயிற்சிகளால் எழுவாயும் பயனிலையும் ஒன்றோடொன்று ஒத்திருக்க வேண்டுமென்று அறிந்தோம். அவ்வாறு பொருத்தமில்லாத வாக்கியங்களின் அமைப்பு பிசகு.

பயிற்சி : கீழுள்ள வாக்கியங்களைப் பிழை திருத்தி எழுதுக :

1. நரேந்திரர் வாழ்க்கையை வெறுத்தான்.
2. சீடர்கள் இராமகிருஷ்ணருக்குச் சமாதி கட்டினன்.
3. நம் தேசத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டாயின.
4. விசுவநாத தத்தருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தன.

# 14. குரங்கும் தூக்கணாங் குருவிகளும்



(1)

'பாடறு மூடனுக்குப்
பற்பல போதித்தாலும்
வீடுடை யவனை வீட்டை
இழந்திடச் செய்வான்' என்று,
நேடறு சன்மன் சொல்வான்.
நெடியதோர் பழமரத்தில்
கூடு கொண்டன இரண்டு
தூக்கணங் குருவி தாமே.

(2)

குளிரினுல் நடுங்கி, வானக்
கொடுமழையால் நனைந்து
நளிர் சுரத்தோடு தேகம்
நடுக்கியே பற்கள்கிட்டி
வளம்அறு குரங்கொன் றங்கு
வந்தது ; குருவிபார்த்தே
இளகிய மனத்தினலே இன்
சொலால் ஒன்று சொல்லும்.

(3)

"கைகள்கால் இருந்தும் இந்தக் கன்மத்தை அனுபவிக்கும்
செய்தியேன்?" என்ன, "ஊசி மூஞ்சிகோள் சிறியமூடா!
வைதுநீ புத்திசொல்ல வல்லையோ?' எனக் கோபித்து,
நெய்திடும் அதன்தன் கூட்டை நெடுங்கையால் பிய்த்த தன்றே.

— பஞ்சதந்திரப் பாடல்.

I. இக்கதையை வசனநடையில் எழுது: சன்மன் — சோம சன்மா.

II. கடின பதங்கள்: பாடுறு, நேடுறு, நெடிய, நளிர், வளம், அறு, இன்சொல், கன்மம், நெய்திடும், பிய்த்து.

# 15. என் வாழ்க்கை வரலாறு

1. என் பிறப்பைப் பற்றி எனக்கே தெரியாது. ஆனால், என் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்குச் சற்று சொல்லுகிறேன்: கேளுங்கள்.

2. என்னை 'ரேடியோ' என்று சொல்லுவார்கள். என் உருவத்தில் அநேக வேறுபாடுகள் உண்டு. பொருள் கொடுத்து என்னைத் தனவான்கள் வாங்கிக் கொள்ளுவார்கள். உருவத்தில் நாங்கள் வேறுபட்ட போதிலும் அமைப்பில் ஒன்றே.

3. என்னுடைய அமைப்பை அறியாதவர்கள் என்னைத் தொட்டுக் குறும்பு செய்தால், அவர்கள் என்னிடம் திரும்பி வராதபடி பாடம் கற்பித்து விடுவேன்.

ஆனால், நான் அடக்கமுள்ளவன். என் எஜமானர் 'பேசு' என்றாலொழிய நான் பேசமாட்டேன். பேசச் சொன்னால், தெளிவாகப் பேசுவேன். நன்றாகப் பேசா விட்டால் அவர் என் வாயை அடைத்து விடுவார். அதற்குப் பயந்து அவர் இடும் வேலையைச் சரிவரச் செய்வது என் வழக்கம். 'செய்வன திருந்த'ச் செய்தல் நல்லதல்லவா ?




4. என் வேலை என்ன தெரியுமா? நான் உலக முழுதும் சுற்றி வருவேன். உலகத்தின் பல பாகத்துச் செய்திகளை அவ்வப்பொழுது அறிந்து விவரிப்பேன். என் எஜமானர் குரலுக்கு எந்நேரத்திலும் 'ஏன் ?' என்பேன். எனக்கு வேலை என்றால் வெகு பிரியம்.

5. எல்லாரிடத்திலும் நன்றாகப் பழகும் குணம் எனக்குண்டு. ஏழைகள், தனவந்தர்கள் என்ற வேற்

றுமை எனக்கில்லை; ஆண், பெண் என்ற வித்தியாசம் இல்லை; அரசர்கள், சேவகர்கள் என்ற பேதமில்லை. அவரவர்கள் சொல்லுபவைகளை வஞ்சனையின்றிப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவேன்.

6. எனக்குச் சகிப்புத் தன்மையும் ஏராளமாக உண்டு. எனக்குப் பிடிக்காத மனிதர்களைக்கூட நான் சகித்துக்கொண்டிருப்பேன். எவ்வளவு கடூரமான சங்கீதமான போதிலும், கடைசி வரை பொறுத்துக் கொண்டிருப்பேன்.

7. என்னைக் கட்டி நிர்வகிப்பது யானைக்குத் தீனி போடுவதைப் போன்றதாகும். அடிக்கடி எனக்கு உடம்பு கெட்டுவிடும். அதற்கு வைத்தியச் செலவு அதிகம் ஆகும். நானும் மின்சாரமும் நண்பர்கள். எனக்கு மின்சார சக்தி அளிக்க என் எஜமானருக்குப் பொருட் செலவு அதிகம் ஆகும். என்னை அருமையுடன் பாதுகாத்து வந்தாலன்றி, நான் சுகமாக இருக்க மாட்டேன்.

8. சில சமயங்களில் நான் பாடிக்கொண்டே இருக்கும்பொழுது என்னைச் சூழ்ந்திருப்பவர்கள் உறங்கி விடுவார்கள். அப்பொழுது நான் மட்டும் கேட்பாரின்றிப் பாடிக்கொண்டிருப்பேன். என்னை யாராவது நிறுத்தும் வரையில் நான் ஓய்வு எடுத்துக்கொள்ள முடியாது.

9. அரசாங்கத்தார் என்னை வெகு அருமையாகப் பாதுகாத்து வருகின்றனர். என் இனத்தார் இந்

நாட்டில் வெகு வேகமாகப் பரவி வருகின்றனர். அநேக கிராமங்களிலும் வீடுகளிலும் நாங்கள் இருக்கிறோம். எங்கள் பேச்சுக்களைக் கேட்டுப் பண்டிதர்களும் பாமரர்களும் களிப்படைகின்றனர். நாங்கள் பாடுவோம்; பேசுவோம்; நாடகங்கள் ஆடுவோம்; செய்திகள் சொல்லுவோம். ஆனால், நாங்கள் பிறநாடுகளில் பிறந்தவர்கள்.

**10.** எங்களை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்ய பல அறிஞர்கள் முயன்று வருகின்றனர். இம் முயற்சியில் வெற்றியடைந்தால், ஏழைகள் வீடுகளிலும் நாங்கள் குடியிருப்பது சாத்தியமாகும். இத்துறையில் யாவரும் எங்களுக்கு உதவிபுரிய வேண்டும்.

---

I. கடின பதங்கள்: *மர்மம், வேறுபாடு, தனவான், அமைப்பு, திருந்த, பேதம், சகிப்பு, நிர்வகிப்பது, பாமரர், இனம், அறிஞர், துறை.*

II. கேள்விகள்:

1. ரேடியோவின் உபயோகம் என்ன?
2. ரேடியோ, செய்வதை எவ்வாறு திருந்தச் செய்யும்?
3. ரேடியோவுக்கு எதனுடன் சிநேகம்?

III. உன் கிராமத்தில் பொதுவாக ஒரு ரேடியோ வைக்க வேண்டும் என்று ஜில்லா கலெக்டருக்கு ஒரு விண்ணப்பம் எழுது.

IV. இலக்கணம் : பயிற்சி : கீழுள்ள வாக்கியங்களில் பன்மைகளை ஒருமைகளாகவும், ஒருமைகளைப் பன்மைகளாகவும் மாற்றுக :

1. ஒரு வீட்டில் ரேடியோ இருக்கிறது.
2. பாட்டுக் கச்சேரி நன்றாக இருந்தது.,
3. ஒரு தனவான் என்னை வாங்கிக்கொண்டார்.
4. நான் கேட்பாரின்றிப் பாடிக்கொண்டிருப்பேன்.
5. நாங்கள் பிறநாட்டில் பிறந்தவர்கள்.

# 16. பாரி

1. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் பாரி என்ற சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் ஆண்டு வந்த நாட்டிற்குப் பறம்பு நாடு எனப் பெயர். அது ஒரு மலை நாடு. அவனுடைய ஆளுகையில் முந்நூறு கிராமங்கள் உட்பட்டிருந்தன.

2. பாரி, கேட்பவர்க்கு இல்லையென்னாது அளிக்கும் வள்ளல். அவனுக்கு மேலோர், கீழோர் என்ற பேதம் கிடையாது. புலவர்களே அவனுக்கு நெருங்கிய நண்பர்கள். தன்னிடம் வந்தவர்களுக்கெல்லாம் பரிசுகள் வழங்கும் மாண்புடையவன்; சிறந்த போர் வீரன்; இளகிய மனமுடையவன்.

3. இவ் வரசன், ஒரு நாள் தன் தேரின்மேல் ஏறிக்கொண்டு, தன் மலைநாட்டைச் சுற்றிப் பார்க்கச்

சென்ருன். அங்கு பல பழமரங்கள் வானளாவி இருந்தன. மான்கள் அங்குமிங்கும் ஓடியாடித் துள்ளித் திரிந்தன; மயில்கள் ஆனந்தமாகத் தோகைகளை விரித்தாடின; மலை யருவிகள் சலசல வென்று பாய்ந்துகொண்டிருந்தன; காட்டுப் புஷ்பங்கள் கம்மென வாசனை வீசின. இத்தகைய இயற்கைக் காட்சிகளில் மன்னன் மெய்ம்மறந்து சென்ருன்.



4. செல்லும் வழியே ஒரு முல்லைக் கொடியைக் கண்டான். அது நன்ருகச் செழித்து வளர்ந்திருந்தது. ஆனுல் நன்ருகப் படர்வதற்கு ஊன்று கொம்பு அதற்கு இல்லை; அது காற்றில் அசைந்து உதவியின்றித் தத்தளித்ததை அரசன் கண்டான். அதன் நிலைமைக்கு இறங்கினுன். "இம்முல்லைக் கொடி பற்றிப்

படரக் கொம்பில்லாமல் வருந்துகிறதே" என்று வருந்தினான். உடனே தன் தேரை அக் கொடி யருகில் கொண்டு நிறுத்தினான்; அக்கொடியை எடுத்துத் தன் தேரின் மேல் படர வைத்தான். கால் நடையாகவே ஊருக்குத் திரும்பினான். ஒரு கொடியின் துன்பத்தைக் கண்டு சகிக்காத மனத்தினன் பாரி. வரையாது கொடுக்கும் வள்ளலாகிய பாரியின் புகழ் பாரெங்கும் பரவியது.

**5.** பாரிக்கு இரண்டு பெண்கள் இருந்தனர். அவர்களுக்கு **அங்கவை, சங்கவை** எனப் பெயர். பாரியின் புகழ் பரவுவதைக்கண்ட சேர, சோழ, பாண்டிய அரசர்கள் அவனிடம் பொறாமை கொண்டு அவனை வஞ்சனையால் கொன்றனர். இம் மூவேந்தர்களுக்குப் பயந்து ஒருவரும் பாரியின் பெண்களை மணக்க முன் வரவில்லை. இப் பெண்கள் ஔவையாரிடம் அடைக்கலம் புகுந்தனர். தம்முடைய கல்வியின் திறத்தால், பொறாமை கொண்ட மூவேந்தர்களின் முன்னிலையில், பாரியின் மகளிர்க்கு ஔவையார் வெகு சிறப்புடன் மணம் முடித்து வைத்தனர்.

**6.** பல அரும்பெருங் குணங்கள் அமையப் பெற்ற பாரியின் கொடைத்திறனுக்குச் சமமாக எதைக் கூற முடியும்?

---

I. கடின பதங்கள்: வள்ளல், சிற்றரசன், மெய்ம்மறந்து, தத்தளித்தது, வரையாது, அடைக்கலம், கொடைத்திறன்.

II. ஔவையார் பாரியின் மக்களுக்கு மணமுடித்த கதையை அறிந்துகொள்.

III. கேள்விகள் :

1. பாரி ஆண்டுவந்த நாட்டின் பெயரென்ன ?
2. அவன் குணங்கள் என்ன ?
3. பாரி, முல்லைக் கொடிக்கு ஏன் தன் தேரைக் கொடுத்தான் ?
4. மூவேந்தர்கள் யாவர் ?
5. இவர்கள் பாரியை எவ்வாறு கொன்றனர் ? ஏன் ?
6. பாரியின் மக்கட்கு ஔவையார் என்ன உதவி செய்தாள் ?

IV. இலக்கணம் : பெயர்ச்சொற்களில் பல வகைகள் உண்டு. அவைகளில் இரண்டு இனங்களைப் பற்றி முதலில் அறிந்துகொள்ளுவோம்.

அரசன், இடையன், தந்தை, பையன் - இவை ஆண் இனத்தைக் குறிக்கின்றன ; இவை ஆண்பால் பெயர்கள். அரசி, இடைச்சி, அன்னை, பெண் - இவை பெண்பால் பெயர்கள்.

வினைச்சொற்களுக்கும் பால் உண்டு.

(உ-ம்.) கொடுத்தான் — ஆண்பால்.
கொடுத்தாள் — பெண்பால்.

V. (1) பின்வரும் பதங்களுக்குப் பன்மைகள் யாவை ?

வீடு, இடையன், சிங்கம், ஆடு, புஷ்பம், பெண், அரசன், கொடி, மான்.

(2) ஒருமைகள் எவை ?

கிராமங்கள், புலவர்கள், மரங்கள், தோகைகள், மகளிர்.

VI. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைக்க :

1. பாரி பறம்பு நாட்டிற்கு ——— .
2. அவன் வரையாது கொடுக்கும் ——— .
3. முல்லைக் கொடி ——— உயர்ந்திருக்கிறது.
4. அதன் நிலைமையைக் ——— ——— ——— .
5. மூவேந்தர்கள் பாரியை ——— கொன்றனர்.

# 17. கூட்டுறவுச் சங்கம்

1. எத்தேசத்திலும் ஜனங்களிடையே ஒற்றுமை அத்தியாவசியம். ஒற்றுமை யில்லாவிட்டால் பகைவர்கள் நாட்டை அபகரித்துக்கொள்வர். நாட்டு ஒற்றுமைக்குச் சமூக ஒற்றுமையே அடிப்படையானது. சமூகத்தில் ஒற்றுமை இன்றேல், நாட்டில் வேற்றுமை அதிகரிக்கும்,

2. கூட்டுறவுச் சங்கங்கள் சமூக ஒற்றுமைக்குச் சிறந்த சாதனங்கள். மேல் நாட்டினரின் வாழ்க்கை உயர்வுக்குக் காரணம் அவர்களிடம் இருக்கும் ஒற்றுமையும் கூட்டுறவு முறையுமேயாகும். ஒருவன் ஒரு பெருங் காரியத்தைத் தன்னந்தனியனாய்ச் செய்வதைக் காட்டிலும், பலர் ஒன்று சேர்ந்து செய்தால், அக்காரியத்தில் வெற்றி ஏற்படும். ஒரு கிராமத்தில் ஒரு

சாலை கட்டவேண்டுமானல், ஒருவனால் எக்காலத்தில் கட்டி முடிக்க முடியும்? வீட்டிற்கு ஒருவராக யாவரும் சேர்ந்து வேலை செய்தால் வெகு சீக்கிரத்தில் சாலையைக் கட்டி முடிக்கலாம். இவ்வகை ஒற்றுமைக்கே கூட்டுறவு' எனப் பெயர். பலபேர் சேர்ந்து கூட்டுறவு முறையில் ஸ்தாபிக்கும் சங்கமே 'கூட்டுறவுச் சங்கம்' எனப்படும்.

3. இவ்வகைச் சங்கங்களை அரசாங்கத்தார் முதன் முதலில் கிராமங்களில் ஏற்படுத்தினர்கள். விவசாயம் செய்ய, அடிக்கடி மாடு வாங்க, ஏர் செய்ய, நிலம் வாங்க, கிணறு வெட்ட, இன்னும் இவை போன்ற காரியங்கட்குப் பணம் தேவை. அக்காலத்தில் கிராமத்தார் ஊரிலுள்ள செல்வந்தரிடம் கடன் வாங்கிவந்தனர். அநேகமாக அத்தொகையைத் திருப்பிக்கொடுக்க இயலுவதில்லை. வீடு, நிலம் முதலிய சொத்துக்களைக் கடனுக்கு ஈடு செய்துவிடுகின்றனர். இக் கஷ்டங்களினின்றும் விவசாயிகளை மீட்கவேண்டியே இச் சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இச் சங்கங்களில் நாணயமுள்ள எவரும் சேரலாம்.

4. பொருள் வருவாய் அதிகம் இருப்பவர்களிடத்திலிருந்து தொகைகளைச் சரசமான வட்டிக்கு வாங்கி, அவரவர்களுடைய தேவைக்குத் தக்கபடி, இச் சங்கங்கள் கடன்கள் வழங்குகின்றன. கடனைப் பெற்ற பொருளைக்கொண்டு, விவசாயிகள் எரு, ஏர், கால்நடைகள் விதைகள் வாங்கலாம். இத் தொகைகள் குறைந்த

வட்டிக்குக் கொடுக்கப்படும்; இவற்றை வருஷந் தோறும் சிறிது சிறிதாகத் திருப்பிக் கொடுக்கலாம்.

5. இவ்வகைச் சங்கங்களைத் துரைத்தனத்தாரே அங்கீகாரம் செய்யவேண்டும். கூட்டுறவு மத்திய நிதிகள் இவைகளுக்குப் பொருளுதவி செய்யவேண்டும். சங்கத்தின் மூலதனத்திற் கேற்றவாறுதான் மத்திய நிதிகளும் உதவி செய்யும். ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு நிர்வாக சபை உண்டு. சங்க உறுப்பினர்களே நிர்வாக சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். நிர்வாக சபையினர் சங்க வேலைகளைக் கவனித்துக் கொள்ளுவார்கள்.

6. கூட்டுறவுச் சங்கங்களில் கடன் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள், கைத்தறி நெசவுச் சங்கங்கள், நூற்போர் சங்கங்கள், சிக்கனச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் எனப் பல வகைப் பிரிவுகள் உண்டு. இவற்றைத் தணிக்கை செய்யக் கூட்டுறவு இலாகாவை அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

7. நமது நாட்டிலும் இச் சங்கங்கள் விரைவாகப் பரவி வருகின்றன. சிக்கன வாழ்க்கையைப் போதிக்கும் இச் சங்கங்களே நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை. கூட்டுறவு இயக்கம் நன்ருக வேரூன்றினுல்தான் நமதுநாடு செழித்து, ஜனங்களும் சுகித்திருப்பார்கள்.

I. கடின பதங்கள்: அத்தியாவசியம், பகைவர், அபகரித்தல், அடிப்படை, நாணயம், மீட்க, வருவாய், சரசம், அங்கீகாரம், நிதி, உறுப்பினர், தணிக்கை, சிக்கனம்.

II. கேள்விகள் :

1. நாட்டில் எப்பொழுது வேற்றுமை அதிகரிக்கும்?
2. மேல் நாட்டவரின் வாழ்க்கை உயர்வுக்கு என்ன காரணம்?
3. 'கூட்டுறவு' என்ருல் என்ன?
4. இச் சங்கம் விவசாயிகட்கு எவ்வாறு உதவும்?
5. இவைகளுக்குப் பொருள் உதவி ஏது?
6. இவை எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன?
7. கூட்டுறவுச் சங்கங்களில் சிலவகைகளைச் சொல்லு.

III. உன் கிராமத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டும் என்று ஜில்லா கூட்டுறவு அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் எழுது.

IV. இலக்கணம்: வினைச்சொற்கள் தொழிலைக் காட்டுகின்றன என்று அறிந்தோம். அத்துடன் அத்தொழில் நடந்த காலத்தையும் அவை காட்டும். (உ-ம்.) ராமன் சங்கத்தில் கடன் வாங்கினுன். இச் செய்கை நடந்து முடிந்துவிட்டது. 'வாங்கினுன்' என்ற வினைச்சொல் இறந்த காலத்தைக் காட்டுகிறது.

இப்பொழுது நடக்கிறதாகச் சொல்லும் வினைச்சொற்களுக்கு நிகழ் காலம் எனப் பெயர்.

கிராமத்தில் ஒரு கூட்டம் நடக்கிறது — நிகழ்காலம்
கிராமத்தில் ஒரு கூட்டம் நடக்கும் — எதிர்காலம்

பிரசங்கம் நடந்தது — இறந்தகாலம்
பிரசங்கம் நடக்கிறது — நிகழ்காலம்
பிரசங்கம் நடக்கும் — எதிர்காலம்

V. பின் வரும் வாக்கியங்களிலுள்ள வினைச் சொற்களையும் அவற்றின் காலங்களையும் குறிக்க :

1. கோவிந்தசாமி 'கூட்டுறவு' என்பதைப் பற்றிப் பிரசங்கம் செய்வான்.
2. கந்தன் மாடு வாங்கக் கடன் வாங்கினான்.
3. கணேசன் சங்கத்தில் பணம் கட்டுகிறான்.
4. சங்கத்திற்கு ஒரு கட்டிடம் கட்டுவோம்.
5. தலைவர் தேர்தல் நாளைக்கு நடைபெறும்.

## 18. கண்ணன் துதி

[கிரிதரனை நேரிற் காண வேண்டுமென்ற அவாவினால் மீரா பாடுகிறாள்.]

1. கார் முகிலின் மேனிபெறும் நந்தகுமாரா ! — என்றன்
கண்களிலே குடியிருப்பாய் நந்தகுமாரா !
மார்பினிலே வைஜயந்தி மாலையணியும் — உன்றன்
வடிவினிலே மயங்கி நின்றேன், நந்தகுமாரா !
ஆரமுத முறுமிதழ் மீதிலமரும் -- குழல்
அழகினுக்கோர் அளவுமுண்டோ, நந்தகுமாரா !
சேருமணி யாடரைஞாண் பாதசலங்கை — ஒலி
செய்திடவே வந்தருள்வாய், நந்தகுமாரா !
பாரும் விண்ணும் பணிந்து தொழும் நந்தகுமாரா!—என்றும்
பத்தரையா ளீசன் நீயே, நந்தகுமாரா !



2. கண்ணா முனைக் காணமல் கலக்கங் கொள்ளும்;
கணமேனு முள்ளத்தி லமைதி யில்லை;
உண்ணுதற்கும் பசி யில்லை, உறக்க மில்லை;
ஓரிரா ஓர் யுகமாய்க் கழியுதையா!
நண்ணி எனை வாள்போல அறுக்குமிந்த
நலிவை யெலாம் யாவரிடம் சொல்லி நிற்பேன்!
எண்ணி யெண்ணி நைந்துருகும் என்னை யாள
எந்நாளிங் கெழுந்தருள்வாய்? எம்பிரானே!

**ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை.**

---

I. கவிஞர் ஸ்ரீ தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் பாடிய 'அன்பின் வெற்றி' என்னும் நூலின் ஒரு பகுதி இப் பாடல்கள். மீராபாய் என்ற இராஜபுத்திர அரசி கண்ணன் மேல் பக்திகொண்டு, சுகம், செல்வம் எல்லாம் மறந்து, துதிக்கிருள். மீராபாயின் கதையைத் தெரிந்து கொள்ளவும்.

II. கடின பதங்கள்: கார்முகில், மேனி, ஆரமுதம், இதழ், கணம், யுகம், நண்ணி, நலிவு, நைந்துருகும்.

# 19. கிராம வாழ்க்கை

**1.** நமது இந்தியா தேசத்தின் மேன்மைக்கும் பெருமைக்கும் அதன் கிராம வாழ்க்கையே சிறந்த காரணம். நவீன நாகரிகத்திற்கு இசைய ஓயாமலொழி யாமல் உழைக்கும் நகரவாசிகளுக்குக் கிராம வாழ்க்கை யானது சுவர்க்கம்போல் இன்பம் அளிக்கிறது. இத் தகைய பெருமை வாய்ந்த கிராமங்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

**2.** நம் நாட்டிலுள்ள சுமார் ஏழு லக்ஷம் கிராமங் களில் விவசாயிகள் வசிக்கின்றனர். இவர்களுக்கு வேளாண்மையே வாழ்க்கைத் தொழில். மக்கள் உல கின்கண் உயிர் வாழ்வதற்கு ஆகார வகைகளே பிரதா னம். இந்த ஆகாரவகைகளை உற்பத்தி செய்பவர்களே கிராமவாசிகள்.

**3.** ஆண்கள் தங்கள் தோள்களின்மேல் கலப்பை களைத் தாங்கி, மாடுகளை ஓட்டிக்கொண்டு நிலங்களுக்குச் செல்லும் காட்சியைக் கிராமங்களில் வைகறையில் காண லாம். காலையில் இளஞ் சூரியன் உதிக்கும் நேரத்தில் காணும் இயற்கைக் காட்சி நம்மை வசீகரிக்கும். ஆறு கள், மலைகள் இவற்றையடுத்துக் கிராமங்கள் பரவி யிருக்கின்றன.

**4.** நடுப் பகற்பொழுது வரையில் புலங்களில் விதைத்தல், நீர் இறைத்தல், களை பிடுங்குதல் முதலிய அலுவல்களைக் கிராமவாசிகள் கவனிப்பார்கள். அவர்

கள் வீடுகளிலிருந்து மனைவி மக்கள் உணவு கொண்டு வருவார்கள் ; வேலைக்கும் உதவியாயிருப்பர். அவர்கள் எளிய ஆகாரம் உட்கொள்ளுவார்கள். மாலையிலும் வயல்களில் வேலை செய்து, வீடுகளுக்கு ஏகுவர்.

**5.** கிராமங்களிலுள்ள வீடுகள் மண்ணாலாகிய சிறு குடிசைகள். அவை பெரும்பாலும் தென்னங்கீற்று களாலும், வைக்கோல்களாலும் வேயப்பட்ட கூரை



களாயிருக்கும். ஆனால் அவற்றை வெகு சுத்தமாக வைத்திருப்பர். நிதம் வீட்டைப் பெருக்கி மெழுகு வார்கள். விசேஷ நாட்களில் செம்மண் கறைகள் இட்டு அழகு செய்வார்கள். கிராம வாசிகளில் சில தனவந்தர்கள் வில்லை வீடுகளில் வசிப்பர்.

**6.** கிராம வாசிகள் எளிய வாழ்க்கையை மேற் கொண்டவர்கள் ; நகரங்களின் நாகரிக வாழ்வில் நாட்

டம் இல்லாதவர்கள்; தேவைக்குப் போதிய உடையே அணிபவர்கள்; நல்ல தேகக்கட்டு உடையவர்கள்; நற்குணமும், தைரியமும், பலமும் பொருந்தியவர்கள்.

**7.** இத்தகைய பெருமை பெற்ற கிராமங்கள் இப்பொழுது சீர்கெட்டு விட்டன. கிராம வாசிகள் பிழைப்பின் நிமித்தம் நகரங்களை நாடுகின்றனர். கற்றவர்களைக் கிராமங்களில் காண்பது அரிது. நாட்டுப்புற மக்கள் ஏழ்மையாலும், நோயாலும், கல்விக் குறைவாலும் வருந்துகின்றனர்; எங்கும் அசுத்தம் குடிகொண்டிருக்கிறது. கிராம வாழ்க்கை சிதைந்து சீர்கேடடைந்து விட்டது.

**8.** கிராமங்களை அழகாயும் சுத்தமாயும் வைத்திருந்தால், அங்கு வசிக்கச் சந்தோஷமாயிருக்கும். உயரமான இடங்களில், காற்றும் வெளிச்சமும் உள்ளவைகளாக வீடுகளைக் கட்டவேண்டும். நீர் தேங்கும் இடங்களில் கொசுக்கள் தோன்றி, அதிகமாகிப் பரவும்; அம்மாதிரி இடங்களைத் தூர்க்கவேண்டும். தெருக்கள் விசாலமாக அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பாடசாலை, ஒரு கூட்டுறவுச் சங்கம், பொது விளையாட்டு ஸ்தலங்கள் முதலியன அவசியமானவை.

**9.** இவ்வகையில் கிராமங்கள் சீர்திருந்தினல் படித்தவர்களும் அங்கு வசிக்க முடியும். கற்றவர்கள் கிராமச் சீர்த்திருத்தம் செய்ய முயலவேண்டும். கிராம வாசிகள் தங்கள் ஓய்வு நேரங்களை வீணுக்கா வண்ணம்

யாதேனும் ஒரு குடிசைத் தொழிலை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். மேல்நாட்டு நாகரிகத்தின் நல்ல அம்சங்களையும் சுகாதார முறைகளையும் கைக்கொண்டு பழைய முறைகளோடு கலந்து கிராமங்களைத் திருத்தியமைக்கவேண்டும். கிராமங்களில் ஊக்கமும் ஒற்றுமையும் ஏற்படவேண்டும். ஒற்றுமை யின்மையினால் நலிவுற்ற கிராமங்கள் அநேகம். பிணக்கும், வறுமையும், துக்கமும், பொறாமையும் குடிகொண்டுள்ள நம் கிராமங்களில் ஒற்றுமையும், செல்வமும், சந்தோஷமும், அன்பும் நிலவ நாம் முயலவேண்டும்.

**10.** ஜன சமூகத்தில் சாந்தம், அமைதி, திருப்தி, என்ற குணங்கள் நிலைக்க வேண்டுமென்றால் நமது கிராமங்கள் சீர்பெறவேண்டும். இப்படிச் சீர்பெற்ற கிராம வாழ்க்கையே நமது தேசமுன்னேற்றத்திற்குச் சிறந்த ஆதாரமாகும்.

---

I. கடினபதங்கள்: மேன்மை, நவீனம், சுவர்க்கம், வேளாண்மை, வைகறை, புலங்கள், அலுவல், ஏகுவர், விதம், நாட்டம், சிதைந்து, தூர்க்க, நலிவு, முன்னேற்றம், ஆதாரம்.

II. கேள்விகள்:

1. நமது நாட்டில் முக்கியத் தொழில் என்ன?
2. நாம் ஆகாரவகைகளை எவ்வாறு பெறுகிறோம்?
3. கிராமங்களில் காலையில் எவ்வகைக் காட்சிகளைக் காணலாம்?

4 கிராமங்களில் வீடுகள் எப்படி இருக்கும்?

5. கிராம வாசிகள் எவ்வகை வாழ்க்கையை மேற்கொண்டவர்கள்?

6. கிராம வாழ்க்கை எவ்வாறு சீர்கேடடைந்து விட்டது?

7. கிராமங்கள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?

8. அவற்றை எவ்வாறு சீர்திருத்த வேண்டும்?

9. தேச முன்னேற்றத்திற்குச் சிறந்த ஆதாரம் எது?

III. இலக்கணம்: 'இங்கு வந்த மனிதன் பெயர் ரங்கன்'. 'என்னுடன் பேசிய மனிதன் என் சிற்றப்பன்'. இங்கே வந்த, பேசிய என்ற சொற்கள் மனிதன் என்ற பெயரைக்கொண்டு முடிகின்றன. இவைகளுக்குப் பெயரெச்சங்கள் என்று பெயர்.

எளிய வாழ்க்கை<br>உயர்ந்த குணம்<br>அழகிய காட்சி } இவற்றில் பெயரெச்சங்கள் எவை?

IV. 'அவன்' என்ற எழுவாயுடன் 'எழுது' என்ற வினைச்சொல்லைச் சேர்த்து மூன்று காலங்களையும் கொண்ட வாக்கியங்களை அமைக்கவும்:

V. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமைக்கவும்:

1. ஒவ்வொரு ——— கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும்.

2. கிராமங்களில் சுகாதாரத்தை ——— ———.

3. கிராம வாசிகளுக்குத் தேவையான நலன்களைச் செய்து ——— ———.

4. கிராமங்களில் படித்தவர்கள் சென்று ——— ———.

# 20. பீஷ்மர் சபதம்

1. முன்ஞெரு காலத்தில் நம் பாரத நாட்டை **சந்தனு** என்ற அரசன் ஆண்டுவந்தான். அவனுக்குக் **காங்கேயன்** என்ற குமாரன் இருந்தான். காங்கேயனைத் தகுந்த ஆசிரியர்களிடம் ஒப்படைத்து, அரசர்க்குரிய கல்வி கேள்விகளிற் சிறக்கச் செய்தான். வில் வித்தையில் காங்கேயன் நல்ல தேர்ச்சியடைந்தான்.

2. ஒருநாள் சந்தனு மகாராசன் வேட்டையாடக் கானகம் சென்ருன். நெடுநேரம் வேட்டையாடிக் களைத்து ஒரு தடாகத்தின் கரையில் இளைப்பாறிக் கொண்டிருந்தான். அச் சமயம் அங்கு வந்த ஒரு அழகிய கன்னிகையைக் கண்ணுற்ருன். அவள் அழகில் ஈடுபட்ட அரசன் அவளை மணக்க இச்சை கொண்டான்.

3. அப் பெண்ணின் வரலாற்றை அரசன் விசாரித்தான். அவள் அக் கானகத்திற் கருகே வசித்து வந்த ஒரு செம்படவனுடைய மகள் என்று அறிந்தான். அவளுடன் கூடச் சென்று, அச் செம்படவனை அரசன் கண்டான்.

4. அரசன் தன்னை நாடி வருவதைக் கண்ட அச் செம்படவன், அவனை வரவேற்று உபசரித்தான். அரசன் செம்படவனை நோக்கி "பெரியாரே! நான் அஸ்திஞபுரத்தின் அரசன்; என் பெயர் சந்தனு. உமது மகளை இன்று நான் கானகத்தில் கண்டேன்; அவளை

மணக்க இச்சை கொண்டேன். என் கோரிக்கையை நீர் நிறைவேற்ற வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

5. அவ் வலைஞன் அரசனை நோக்கி, "ஐயா ! நான் பெறுதற்கரிய பேறு பெற்றேன். உம்மை மருமகனாக அடைவது என் பாக்யமே ! என் மகளை நீர் மணப்பதில் எனக்கு யாதொரு ஆட்சேபணையுமில்லை. ஆனால்



என் வேண்டுகோள் ஒன்று உண்டு. என் மகளின் சந்ததிக்கே அரசு உரியது எனத் தாங்கள் வாக்களிக்க வேண்டும். இன்றேல், இம்மணத்திற்கு நான் இசைய முடியாது" என்றான்.

6, அரசன் கவலை யடைந்தான். 'என் குமாரனாகிய காங்கேயனன்றோ அரசுரிமை பெற்றவன்! அவ்

வுரிமையை அவன் எவ்வாறு இழக்கக் கூடும்! இச் செம்படவனுக்கு நான் எவ்விதம் வாக்களிக்க முடியும்!' என்று எண்ணி, மனக்கிலேசமுற்றுத் தன் அரண் மனையை அடைந்தான்.

7. அந்நாள் முதல் மனக் கவலையால், ஊண் உறக்க மற்று, செம்படவச் சிறுமியை நினைந்து மன முறுகினன், அரசனுடைய மனக் கவலையைக் கண்ட காங்கேயன் அவனை அணுகி, "தந்தையே! என் இம் முகவாட்டம்? உமது கவலை என்ன? எனக்குத் தெரி விப்பீராணுல் என்னுல் இயன்ற வரையில் அதைப் போக்க முயலுவேன். தயவு கூர்ந்து என்னிடம் தெரிவிக்க வேண்டும்" என்று மன்ருடினன்.

8. கானகத்தில் நடந்த சம்பவங்களை அறிந்த காங்கேயன், உடனே அச் செம்படவனைக் காணச் சென்ருன். அவனை அணுகி, "ஐயா, வலைஞரே! அரசரிடம் தாங்கள் தெரிவித்த நிபந்தனையை நான் அறிவேன். என் தந்தையின் பட்டத்திற்குரிய இள வரசன் நானே. உமது புதல்வியை மணக்க என் தந்தை விரும்புகிருர். அவளைக் கண்டது முதல் ஊணுறக்க மின்றி வருந்துகிருர். உமது நிபந்தனை களை நான் நிறைவேற்றுகிறேன். என் தந்தையார் மனக்களிப்படைய, என் அரசுரிமையை நான் இழக் கச் சம்மதிக்கிறேன். இன்று முதல் எனக்கும் என் சந்ததியில் பிறப்பவர்களுக்கும் இந்த இராச்சியத்தில் உரிமை யில்லை. எனது தந்தையினிடத்தில் உமது

மகளுக்குப் பிறப்பவர்களே அரசுக்குரியவர்கள். என் வரையில் இவ் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றலாமே யொழிய, என் சந்ததிகளை இது எவ்வாறு கட்டுப் படுத்தும்? முடியாது; ஆனுல் ஓர் வழியுண்டு. நான் மணம்புரிந்து கொண்டாலன்றோ எனக்குச் சந்ததிகள் ஏற்படும்? என் ஆயுள்பரியந்தம் நான் மணம்புரிந்து கொள்ளுவதில்லை என்று உறுதி கூறுகிறேன். இனி யாகிலும் என் தந்தையின் வேண்டுகோளை நிறை வேற்ற வேண்டும்" என்று சபதம் செய்து அச் செம் படவனை வேண்டிக்கொண்டான்.

9. 'அரசும் வேண்டாம், மணமும் வேண்டாம்; என் தந்தையின் கவலை நீங்கினுல் போதும்' என்ற எண்ணத்துடன் இக் கோர சபதத்தைச் செய்த காங் கேயனுடைய தியாகத்திற்குச் சமானம் வேறுண்டோ? இதைக் கேட்ட செம்படவன் மனம் பூரித்துத் தன் மகளை அரசனுக்கு மணம் செய்வித்தான். காங்கே யனும் தன் சபதத்தை மறவாமல் தான் இறக்கும் வரை அரசுரிமை ஏற்காமலும் மணம் செய்துகொள் ளாமலும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினுன். சந்த னுவும் தன் மனைவியுடன் நெடுநாள் சுகித்திருந்தான். தம் தந்தையின் மனக்குறையை நிறைவேற்றப் பயங் கரமான சபதத்தைச் செய்தபடியால் காங்கேயனுக்கு '**பீஷமர்**' எனப் பெயர் வழங்கலாயிற்று.

---

I. கடின பதங்கள் : கானகம், தடாகம், கன்னிகை, கண்ணுற்ருன், இச்சை, கோரிக்கை, வலைஞன், பேறு, ஆட்சேபணை, சந்ததி, இசைய, உரிமை, கிலேசம், நிபந்தனை, அசக்தர், பரியந்தம், சபதம், கோரமான.

II. கேள்விகள் :

1. சந்தனு ஏன் மனக்கவலை கொண்டான்?
2. செம்படவனுடைய வேண்டுகோள் என்ன?
3. காங்கேயன் செய்த சபதம் என்ன?
4. சந்தனுவின் மனக்கவலை எவ்வாறு நீங்கியது?

III. பீஷ்மர் சென்ருர் - இதில் 'சென்ருர்' என்ற வினையில் கருத்து முற்றுப் பெறுகிறது. 'பீஷ்மர் விரைந்து சென்ருர்' என்பதில், 'விரைந்து' என்பதில் கருத்து முற்றுப் பெறவில்லை; சென்ருர் என்ருல்தான் கருத்து முடிகிறது. இதில், 'விரைந்து' என்பது வினையெச்சம்; 'சென்ருர்' வினைமுற்று.

| | |
|---|---|
| செம்படவன் நயந்து வேண்டினன்<br>பீஷ்மர் பரிந்து பேசினர்<br>சந்தனு மகிழ்ந்து பதிலளித்தான்<br>காங்கேயன் கனிந்து பேசினன் | இவ் வாக்கியங்களிலுள்ள வினையெச்சம், வினைமுற்று - இவைகளை எடுத்து எழுது. |




# 21. நூல் நிலையம்

1. இவ்வுலகின் கண்ணே வாழும் மக்களுக்குக் கண் போன்றது கல்வி எனப் பெரியோர் கூறுவர். மக்களுக்குக் கண் இன்றியமையாத உறுப்பாகும். கண்களில்லா ஒருவனுக்கு, செல்வங்களெல்லாம் பயன்படா தொழிகின்றன. இயற்கை வனப்புகளெல்லாம் அவனுள்ளே உணர்ச்சிகளை எழுப்பு முடியாது. ஆகவே, கண்ணில்லாதவனுக்கு உலக வாழ்க்கையென்பதே இல்லை என்னலாம். அவ்வாறே, கல்வியறிவில்லாதவனும் அறியாமை என்னும் இருளில் தட்டித் தடுமாறுகிறான்.

2. கல்வி கற்பது மாந்தரின் முக்கியமான கடமையாகும். கல்வியைக் கற்பதற்கு உபயோகமாக இருப்பவை, கற்றுத் தேர்ந்தவர்களால் எழுதப்படும் நூல்

களேயாகும். இவ்வகை நூல்களைச் சேகரம் செய்து ஓரிடத்தில் வைத்து, அவை யாவருக்கும் பயன்படு மாறு அமைக்கப்படும் நிலையத்திற்கு 'நூல் நிலையம்' எனப் பெயர். இந் நூல் நிலையங்களே கல்வியை மக்களிடையே பரவச் செய்வதற்குத் தற்காலத்தில் கையாளப் பெற்றுவரும் சாதனங்கள்.

3. பண்டைக் காலத்தில் வாய் மொழியாகவே கல்வி பரவி வந்தது. எழுத்துக்கள் தோன்றிய பிறகே, நூல்கள் எழுதப்பட்டன. இந் நூல்களைக் கற்க, அங்கங்கே கலாசாலைகள் நிறுவப் பெற்றன. ஆலயங் களில், மத சம்பந்தமான நூல்களைக் கற்பிக்கக் கல்விச் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. பின்னர், மடாதிபதிக ளாகிய துறவிகள் கல்வி நிலையங்கள் அமைத்தனர். இவ்வாறு, மக்களிடையே கல்வி பரவிக்கொண்டே வந்தது. கடைசியாக, அரசாங்கத்தாரே கல்வி ஸ்தா பனங்கள் ஏற்படுத்தலாயினர். இவ்வகை ஸ்தாபனங் களில் நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

4. நம் நாட்டில் அச்சுயந்திரம் தோன்றிய காலத் திலிருந்து பல்லாயிரக் கணக்கான பழைய நூல்கள் புதுப்பிக்கப்பட்டன; புதிய நூல்கள் வெளியிடப் பட்டன. இந் நூல்கள் வெகு விரைவில் அச்சிடப் பட்டு நாடெங்கும் பரவலாயின. ஆயினும், பெரும் பாலோருக்கு எழுதப் படிக்கத் தெரியாத காரணத்தால, சில அறிஞர்களால், தங்களுடைய அறிவு வளர்ச்சிக்கு மட்டுமே நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**5.** இந்தியாவில் நூற்றுக்குச் சுமார் ஏழு பேர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். மற்றவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு நூல் நிலையங்களே இன்றியமையாத சாதனங்கள். இதைக் கருதியே, எல்லா வகையினருக்கும் உபயோகப்படும்படி பொது நூல் நிலையங்கள் ஏற்பட வேண்டும்.

**6.** இந் நிலையங்களிலுள்ள நூல்கள் பல வேறு விஷயங்களைப் புகட்டுவனவாக இருத்தல் வேண்டும்; எளிய நடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்; ஜனங்களுடைய தாய்ப் பாஷையிலேயே பெரும்பாலும் இருக்கவேண்டும். படிக்கத் தெரிந்த யாவருக்கும் புத்தகங்களை இலவசமாக வழங்க வேண்டும். இலவசமாக வழங்கினாலன்றி, ஏழைகளுக்கு இந் நிலையங்கள் பயன் படா. தங்கள் ஓய்வு நேரங்களை வீணாக்காமல் யாவரும் நூல்களைப் படித்து அறிவை விருத்தி செய்து கொள்ளலாம்.

**7.** படிக்கத் தெரியாதவர்கட்கும் இந் நிலையங்கள் பிரயோஜனப்படும். ஒவ்வொரு நூல் நிலையத்திலும் நன்றாகப் படிக்கும் ஒருவரை நியமித்து, அறிவைப் பரப்பக் கூடிய நூல்களையும் பத்திரிகைகளையும் தினந்தோறும் குறித்த நேரத்தில் பாமரர்களுக்குப் படித்துக் காட்ட ஏற்பாடு செய்யலாம். படிக்கக் கேட்பவர்கள், தாமும் படிக்கவேண்டும் என்று ஆவல் கொள்ளுவார்கள்; அவர்கள் அறிவும் விசாலப்படும். நல்ல நூல்களைப் படிக்கக் கேட்டலே கல்வியின் ஒரு சிறந்த அம்சமாகும்.

8. நமது தேசத்திலும் அநேக நூல் நிலையங்கள் முன்காலத்தில் இருந்தன. தக்ஷசீலம், நாளந்தா, உஜ்ஜயினி என்னுமிடங்களில் மிகச் சிறந்த நிலையங்கள் இருந்தன. தஞ்சையிலும் அடையாற்றிலும் பழைய நூல்கள் அடங்கிய நிலையங்கள் இருக்கின்றன. தற்காலத்தில் பரோடா சமஸ்தானத்தில் ஊர் ஊராகப் பிரயாணம் செய்யும் நூல் நிலையங்கள் அநேகம் ஏற்பட்டுள்ளன. நம் மாகாணத்திலும் நூல் நிலையங்கள் அங்கங்கே வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இவை குறைவே.

9. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பொது, இலவச நூல் நிலையம் வேண்டும். இது பலதிறப்பட்டவர்களும் உபயோகப்படுத்தக்கூடியதா யிருக்கவேண்டும். நம் நாட்டில் குடிகொண்டுள்ள அறியாமைப் பேயை அகற்ற இதுவே சிறந்த சாதனம். இதன் மூலமாகவே அறிவுச்சுடரின் ஒளி நமது நாடெங்கும் வீசவேண்டும் நமது நாடு நலம் பெறச் சீரிய நோக்கங்கொண்டு நூல் நிலையங்களை ஆதரிக்க வேண்டும்.

---

I. கடின பதங்கள் : அறியாமை, சேகரம், கையாளப்பெற்று, வாய்மொழி, துறவி, பல்லாயிரம், நடை, இலவசம், நியமித்து, பலதிறப்பட்டவர், அகற்ற, சுடர், சீரிய.

II. கேள்விகள் :

1. 'கண்போன்றது கல்வி' — எவ்வாறு ?
2. நூல் நிலையம் என்றால் என்ன ?

3. நூல் நிலையங்கள் எவ்வாறு ஏற்பட்டன ?

4. இவை எவ்வகைப்பட்டவையாய் இருக்க வேண்டும் ?

5. படிக்கத் தெரியாதவர்களுக்கு இவை எவ்வாறு உபயோகப்படும் ?

6. நம்நாட்டில் பழைய காலத்தில் எங்கெங்கு நிலையங்கள் இருந்தன ?

7. நூல் நிலயங்களை நாம் ஏன் ஆதரிக்க வேண்டும் ?

III. உன் வகுப்பிற்கு ஒரு நூல் நிலையம் ஸ்தாபிக்க நீ என்ன என்ன முயற்சிகள் செய்வாய் என்று எழுது.

IV. இலக்கணம். இது ஒரு அழகிய நூல் நிலையம்.

நான் பார்த்த பெண் வெகு அழகாகப் பாடினாள்.

என் பெரிய மாமன் எனக்கு ஒரு அழகிய புத்தகம் அன்புடன் அளித்தார்.

அவர் வீட்டில் பூக்கும் ரோஜாப்பூ நல்ல வாசனையுள்ளது.

இவ்வாக்கியங்களில் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று இவற்றை எடுத்தெழுது.



# 22. குழந்தை யழகு

1. பொன்னிளங் காலையுன் வண்ணமே — அதிற்
பூத்திடும் செங்கதிர் உன் முகம் ;
மின்னலிற் கோத்தமுத் துன்னகை — கண்ணு
மெல்லிய ரோஜாப்பூ உன்னிதழ் !

2. வண்டு மொய் வெண் மலர் உன் விழி — சுருள்
மாமழை மேகமுன் குஞ்சியே ;
செண்டு செய் அல்லியுன் மென்கரம் — வெற்றிச்
சீதேவி வாசமுன் மார்படா !

3. கொஞ்சும் பசுங்கிளி யுன்மொழி — இசை
கொட்டுங் குழலதைப் போலுமோ ?
செஞ்சரண் அன்னமுன் சேவடி — என்
சிந்தைக் கமுதமுன் செவ்வியே !

4. "அம்மா"வென் றென்னை யழைத்திடின் — விண்ணின்
ஆனந்தம் என்னுளம் பாயுதே — நீ
பொம்மை வைத் தாடிடக் கண்டதும் — இன்பம்
பொங்கித் ததும்பு தேன் கண்களில்!

5. சின்னச் சிநேகிதரோடு நீ — சிறு
தேர்கட்டிச் சாமிவைத் தாடுவாய்;
தின்னத் தரும் பண்டந் தோழர்க்குந் — தரத்
தெய்வ நிவேதன மாக்கு வாய்!

6. இலைக் குழலூதிப் பறை கொட்டி — நீ
இன்ப நடஞ் செய்யும் போதிலே,
தலைப்படும் என்னுட் பரவசம் — மனந்
தாண்டவ மாடும் உலகுடன்!

— சுவாமி சுத்தானந்த பாரதியார்.

---

I. சுவாமி சுத்தானந்த பாரதியார் அநேக பாடல்களையும், வசன நூல்களையும் இயற்றியிருக்கின்றார். இவர் பெருந் துறவி; தமிழ்க் கவிஞர். இவர் பாடிய பாடல்கள் விரும்பத்தக்கவை. இப்பாடலை மனப்பாடம் செய்யவும்.

II. இப்பாடலில் குழந்தையின் அழகையும், அது விளையாடும் அழகையும் தாயார் வர்ணிக்கிறாள்.

III. கடின பதங்கள்: வண்ணம், செங்கதிர், பொன்னிலம், வெண்மலர், கரம், ஸ்ரீதேவி, இசை, செஞ்சரண், சேவடி, செல்வி, விண், பரவசம், தாண்டவம்.

# 23. அபு பகர்

1. சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அரேபியா தேசத்தில் **அபு பகர்** என்ற ஒரு முகம்மதிய குரு இருந்தார். அவர் மெக்கா என்ற நகரில் செல்வமும் கௌரவமும் பொருந்திய ஒரு குடும்பத்தில் பிறந்தார்.

2. அபு பகர் தமது இளம்வயதிலேயே நன்றாகப் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். படிப்பதில் அவருக்கு ஆவல் அதிகமாக இருந்தது. அவர் நன்றாகப் பிரசங்கங்கள் செய்வார்.

3. அவர் முகம்மது நபியிடம் மிக்க அன்பு பூண்டு ஒழுகினார். முகம்மது நபியின் இஸ்லாமிய மதத்தி ் சேர்ந்தார்; அநேகமாக அவருடனே வசித்து வந்தார்.

4. அவர் தம்முடைய செல்வத்தை ஏழை எளி வர்களுக்கும், மத விஷயங்களுக்கும் செலவிட்டார். அக்காலத்தில் முகம்மதிய மதத்தில் சேர்ந்தவர்களை மெக்கா நகரவாசிகள் அடித்துத் துன்புறுத்திவந்தனர். அதிலும் முகம்மதிய மதத்தைச் சேர்ந்த அடிமை களைப் படுத்திய பாடு கொஞ்சமில்லை. இவ் வகை அடிமைகளில் பலரை அபு பகர் திரவியம் கொடுத்து மீட்டார்.

5. முகம்மது மெக்காவை விட்டு மெடினாவுக்கு ஓடிய பொழுது அபு பகரும் அவரைப் பின்தொடர்ந் தார். அவர்களைப் பிடித்துவரப் பல ஆட்களை மெக்கா நகரத்தினர் அவர்கள் பின்னால் ஏவினர். அப்பொழுது

முகம்மது நபியும் அபு பகரும், அங்கிருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டனர். அவர்களைத் தேடி வந்த ஆட்கள் குகையினருகே வந்தனர். அதன் உள்ளே சென்றுதேட அவர்கள் நினைத்தனர். ஆனால், அக் குகையின் வாயிலை ஒரு புருக் கூடும், ஒரு சிலந்தியின் வலையும் அடைத்துக் கொண்டு இருந்ததைப் பார்த்தனர், ஆகையால் குகையினுள் ஒருவரும் சென்றிருக்க மாட்டார்கள் என்று தீர்மானம் செய்து, தம்வழியே சென்றனர். கடவுள் அருளினால் இரு வரும் உயிர் தப்பினர்.

**6.** மறுநாள் அவ்விருவரும் குகையை விட்டு வெளியே வந்து மெடினா நகரம் சேர்ந்தனர். அந் நகர ஜனங்கள் அவர்களைக் களிப்புடன் எதிர்கொண்டு வரவேற்றனர். அவர்கள் வரவை ஆடிப் பாடிக் கொண்டாடினர். முகம்மது நபியை ஒரு ஒட்டகத்தின் மேல் உட்காரவைத்து ஊர்வலம் நடத்தினார்கள். வழியில் ஒவ்வொரு வீட்டாரும் தமது வீட்டிலே முகம்மது நபியைத் தங்கும்படி வற்புறுத்தினர். ஆனால் தாம் ஏறிச் சென்ற ஒட்டகம் எங்கு நிற்குமோ, அவ் வீட்டிலேயே தாம் தங்கப் போவதாக முகம்மது நபி தெரிவித்தார். ஒட்டகம் அபு ஆயுப் என்பவருடைய வீட்டின் முன்னே நின்றது. அவ் வீட்டிலேயே முகம்மது நபியும் அபு பகரும் வசித்து வந்தனர்.

**7.** இவர்களுடைய பெருமையைக் கேள்வியுற்ற மெக்கா நகரத்து ஜனங்கள், கடுங்கோபம் கொண்டு

ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டு வந்து மெடினு நகரவாசிகளை எதிர்த்தனர். அன்று நடந்த பெரும் போரில் முகம்மது நபிக்கு ஒரு துன்பமும் நேரா வண்ணம் அபு பகர் பாதுகாத்தார்.

8. இந்த யுத்தத்தில் மெக்கா ஜனங்கள் தோல்வியுற்றனர். பல பேர் கைதியாயினர். சிறைப்பட்டவர்களை, அபு பகருடைய யோசனையின்பேரில் முகம்மது நபி விடுதலை செய்தார். ஆகையால், இவர்களில் அநேகர் முகம்மதிய மதத்தில் சேர்ந்தனர்.

9. இதன் பிறகு இவ்விரு நகரத்தார்க்கும் அடிக்கடி சண்டைகள் நடந்தன. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஏற்பட்டன. கடைசியில் மெடினு நகரவாசிகளே மெக்கா நகரைக் கைப்பற்றினர். மெக்கா நகரவாசிகளில் அநேகர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் அபு பகரின் வயது முதிர்ந்த தந்தையும் ஒருவர். தம் தந்தையை அபு பகர் முகம்மது நபியின் முன்னால் அழைத்துச் சென்றார்.

10. அவரைக் கண்டதும் முகம்மது நபி அபு பகரை நோக்கி, "நண்பரே! உமது வயது முதிர்ந்த தந்தையை இங்கு நீர் அழைத்து வந்திருக்கக்கூடாது, நாமே அவரிடம் சென்றிருக்க வேண்டும்" என்று கூறினர். பெரியோரிடத்தில் முகம்மது நபி வைத்திருந்த மரியாதைக்கு இது ஒரு உதாரணமாகும்.

11. முகம்மதிய மதம் அரேபியா முழுவதும் பரவிய பின்னரே, முகம்மது நபி காலமானர். அவருக்

குப் பின் அபு புகர் குரு ஆனார். சுமார் இரண்டரை வருஷம் இவர் குருவாக இருந்து, பிறகு காலமானார். அக்காலத்தில் அநேக குருமார்களை இவர் வாதத்தில் வென்றார். பனை ஓலைகளிலும், மரப் பட்டைகளிலும் தோல் துண்டுகளிலும் எழுதப்பட்டிருந்த முகம்மது நபியின் அருள் வாக்குகளைச் சேகரித்து ஒரு புத்தகம் தொகுத்தார். இப் புத்தகமே முகம்மதியர்களின் வேத மாகிய 'குர் ஆன்'.

**12.** அபு பகர் நமது அறுபத்து மூன்றும் ஆண்டில் சுரங்கண்டு படுக்கையில் இறந்தார். இறக்கும் தறுவாயில் தம் மகளை நோக்கி, "நம்மிடத்தில் இருக்கும் ஒட்டகம், சாமான்கள், உடைகள் யாவையும் நான் இறந்த பின் ஓமர் என்ற பெரியவரிடம் கொடுத்துவிடு, ஒரு ஆடம்பரமும் இல்லாமல் என் உடலை அடக்கம் செய்" என்று கூறி உயிர் துறந்தார். இப் பெரியாரின் ஆடம்பரமற்ற வாழ்க்கை இருந்தவாறு என்னே!

---

I. கடின பதங்கள்: பிரசங்கம், கௌரவம், பூண்டு, எளிய வர், திரவியம், ஏவினர், அருள், களிப்பு, வற்புறுத்தல், வண்ணம், கைதி, விடுதலை, வெற்றி, முதிர்ந்த, மரி யாதை, வாதம், சேகரம், ஆடம்பரம், துறந்தார்.

II. கேள்விகள்:

1. அபு பகர் ஏழைகளிடம் எவ்வாறு அன்பு காட்டினார்?
2. மெக்கா ஆட்களிடமிருந்து இவர்கள் எவ்வாறு தப்பினார்கள்?

3. முகம்மது நபி பெரியோருக்கு மரியாதை செலுத்தினர் என்பதற்கு உதாரணம் என்ன ?

4. 'குர் ஆன்' என்பது எவ்வாறு தொகுக்கப்பட்டது ?

III. நான் போகிறேன் ; நாங்கள் போகிறோம்; நீ போகிறாய். இந்த வாக்கியங்களில் நான், நாங்கள் என்ற சொற்கள் அவரவர்கள் தங்களையே குறித்துப் பேசும்பொழுது உபயோகிப்பார்கள். நீ, நீர், நீங்கள் என்ற சொற்களை தங்கள் முன்னுலுள்ளவர்களைக் குறித்துப் பேசும் பொழுது உபயோகிக்கிறோம்.

இவற்றில் தம்மைக் குறித்துப் பேசும் சொற்களாகிய நான், நாம், நாங்கள் என்பவை தனமைப் பெயர்கள். நீ, நீர், நீங்கள் என்பவை முன்னிலைப் பெயர்கள். மற்றைப் பெயர்களாகிய அவன், அவள், அவர், அது, அவை, மணி, ஆடு முதலியன படர்க்கைப் பெயர்கள்.

IV. பின் வரும் வாக்கியங்களில் தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களை எழுது :

1. அவர் திண்ணைப்பள்ளியில் படித்தார்.
2. நான் நேற்று அவரைப் பார்த்தேன்.
3. ரங்கா புத்தகம் கொண்டுவா.
4. அவர்கள் தஞ்சாவூர் சென்றனர்.
5. நீ என்னுடன் வா.
6. நாம் சுற்றுப்பிரயாணம் செய்யலாம்.
7. ராகவன் நேற்று ஊருக்குச் சென்றான்.

V. கீழுள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று இவற்றைப் பொறுக்கி எழுது :

1. படித்த மாணவர்கள் பரீக்ஷையில் தேறிக் களிப்பர்.
2. இங்கு அமைத்த நூல் நிலையத்திற்குப் பலர் சென்று படித்து இன்புறுகின்றனர்.



# 24. மனோவன்மை

1. புராதன இந்தியாவில் அநேக முனிவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சதா கடவுளை நோக்கித் தவம் செய்துகொண்டிருந்தனர். அவர்களில் மிகச் சிறந்தவர் வசிஷ்டர். இவர் நல்லொழுக்கம் பூண்டவர்; நேர்மையுடன் நடப்பவர்; சத்திய சந்தர்; விரதங்களினால் உடல் மெலிந்தவர்; எப்பொழுதும் கடவுள் தியானத்திலிருப்பவர்; பிறருக்கு உதவி செய்வதிலேயே காலத்தைக் கழிப்பவர்.

2. தோற்றத்தால், உடல் வன்மையிற் குறைந்தவர் என அம் முனிவரைக் கூறலாமெனினும், அவர் உள்ளம் வைரத்தைப் போன்ற உறுதியுள்ளது. தாம் நினைத்ததைச் செய்ய வல்லவர். சூரியகுல அரசர்களின் குல குருவாக விளங்கி வந்தார்.

3. வசிஷ்டருடைய பர்ணசாலையில் தெய்விகத் தன்மை வாய்ந்த பசு ஒன்று இருந்தது. அஃது, தேவேந்திரனுடைய ஏவலினால், முனிவருடைய கடவுள் வழிபாட்டுக்குப் பாலும், முனிவர் விரும்பிய யாவையும் அளித்து வந்தது. அதன் பெயர் **காமதேனு**.

4. இத் தவசிரேஷ்டர் வாழ்ந்த கானகத்தைச் சேர்ந்த நாட்டைக் **கோசிகன்** என்ற அரசன் ஆண்டு வந்தான். ஒரு நாள் அவ்வரசன் இக் கானகத்தில் வேட்டையாடிக் களைத்து, வசிஷ்டருடைய பர்ணசாலையை அடைந்தான். வசிஷ்டர், அரசனை வரவேற்று உபசரித்தார். முனிவர் மன்னனுக்கும் அவன் பரிவாரத்திற்கும் காமதேனுவின் உதவியால் நல்விருந்து அளித்தார். காமதேனுவின் செய்கைகளைக் கண்ட மன்னன் மனம் அத் தெய்விகப் பசுவை நாடிற்று; அதைத்தான் அடைய இச்சை கொண்டான்.

5. அரசன் முனிவர் பெருமானை நோக்கி, "தவசிரேஷ்டரே, எனக்கு இப்பசுவை அளிக்கும்படி வேண்டுகிறேன். இவ்வற்புதப் பசு அரசனாகிய எனக்கே தகுந்தது. இதற்கு ஈடாக உமக்கு அநேக அழகிய பசுக்களைக் கொடுக்கிறேன்" என்று கேட்டான்.

6. வசிஷ்டர் "மன்னவ! இது எனக்குரிய பசு அல்ல; இந்திரனால் எனக்குப் பணி செய்ய ஏவப்பட்டது. பிறருக்குச் சொந்தமான இதை என்னால் உனக்களிக்க முடியாது" எனப் பதிலளித்தார். அதைக்

கேட்ட அரசன் வெகுண்டு, அக் காமதேனுவைப் பற்றுமாறு படைவீரர்களை ஏவினன். அத் தெய்வப் பசு சினங்கொண்டு அரசனுடைய சேனையைச் சின்ன பின்னப் படுத்தியது. அதன் சாகசத்தைத் தாங்க முடியாமல், சேனை வீரர்கள் பின்வாங்கினர்.

**7.** தன் பரிவாரங்களின் நிலைமையைக் கண்ட மன்னன் 'இம் முனிவரே இதற்குக் காரணம்' என்றெண்ணி, அவர்மேல் தன் கூரிய அம்புகளை எய்யலாயினன். அதைப் பார்த்த வசிஷ்டர், கைத்தடி யொன்றைத் தம்முன் ஊன்றி அதன் பின்னல் அசையாது உட்கார்ந்தார். அரசன் எய்த அம்புகளெல்லாம் அத் தடியை மீறிச் செல்ல முடியாமல் விழுந்தன. வெகு நேரம் தன்னிடமிருந்த எல்லாவித அஸ்திரங்களையும் அவன் எய்தும் அரசனல் வசிஷ்டரை ஒன்றும் செய்யக் கூடவில்லை. தன் புஜபலம் முனிவரின் தபோ பலத்தின் முன் பயன்படாததைக் கண்டு அரசன் வருத்த மடைந்தான். தவத்தினல் பெறும் மனே வலிமையே வலிமை எனத் தேர்ந்தான்.

**8.** தோல்வியுற்ற அரசன், தன் இராச்சியத்தைத் துறந்து, மரவுரி தரித்து, கானகம் சென்று, இமய மலைச் சாரலில் கடுந்தவம் புரிந்தான். இவனுடைய தவ வலிமையைக் கண்ட தேவர்கள், இவன் தவத்திற்கு இடையூறு செய்தனர். எவ்வித இடையூற்றையும் பொருட்படுத்தாது ஊக்கம் குன்றமல் அநேக ஆண்டுகள் தவம்செய்து, கடவுளருளால் தான் கோரிய

தவவலிமையை அடைந்தான். இத் தவசியே விசுவாமித்திரர் என்ற பெயருடன் விளங்கினர். ஒரு காலத்தில் வசிஷ்டரே இவரைப் 'பிரமரிஷி' என்று ஒப்புக்கொள்ள நேரிட்டது.

8. இக் கதையால், 'உடல் வலிமையால் மட்டும் நாம் கோரியதை அடைய முடியாது; தவ வலிமையால் ஏற்படும் மனோவலிமையையும் மாந்தர் அடைய வேண்டும்' என்று அறிகிறோம்.

---

I. கடின பதங்கள்: புராதனம், நேர்மை, சத்தியசந்தர், விரதம், தியானம், பர்ணசாலை, தெய்விகம், ஏவல், வழிபாடு, நல்விருந்து, சின்னபின்னம், சாகசம், அஸ்திரம், புஜபலம், தபோபலம், மரவுரி, துறந்து, மாந்தர்.

II. கேள்விகள்: (மௌனமாய்ப் படித்து விடைகளை எழுது)

1. வசிஷ்டரின் குண விசேஷங்கள் என்ன?
2. 'காமதேனு' என்பது என்ன?
3. காமதேனு வசிஷ்டரிடம் ஏன் இருந்தது?
4. கோசிகன் ஏன் காமதேனுவை இச்சித்தான்?
5. வசிஷ்டர் அரசனுக்கு யாது பதில் கூறினர்?
6. அரசன் வசிஷ்டருடன் ஏன் போர் புரிந்தான்?
7. இப்போர் எவ்வாறு முடிந்தது?
8. தோல்வியுற்ற கோசிகன் என்ன செய்தான்?
9. இக் கதையால் நாம் என்ன அறிகிறோம்?

III. கீழ்க்கண்ட வாக்கியங்களில் பிழைகளைத் திருத்தி எழுதுக:

1. கோசிகன் வசிஷ்டர்மேல் அம்புகளை எய்தனர்.
2. அரசன் தலைநகர் சென்றார்.
3. காமதேனு படைகளைக் கலக்கினார்.
4. படை வீரர்கள் சிதறி ஓடினான்.
5. வசிஷ்டர் அரசனை வென்றான்.

IV. பொருத்தமான பயனிலைகளும் எழுவாய்களும் அமைக்க:

1. கோசிகன் அம்பு ——.
2. காமதேனு பால் ——.
3. படைவீரர் பலவாறு சிதறி ——.
4. —— ஒரு சிறந்த முனிவர்.
5. —— அந் நாட்டு அரசன்.
6. —— சிறந்த சாதனம்.

# 25. குசேலர்

(நாடகம்)

[முன் கதை: குசேலர் அல்லது சுதாமா என்ற அந்தணர் மிகுந்த ஏழை. அவர் சுசீலை என்ற மனைவியுடனும், இருபத்தேழு குழந்தைகளுடனும், இல்லறம் நடத்திவந்தார். அவர் இளமையில் கண்ணபிரானின் பள்ளித்தோழர். வறுமையால் வாடும் குழந்தைகளைக் காப்பாற்ற, கண்ணனைக் கண்டு, சிறிது பொருள் யாசிக்கும்படி சுசீலை கணவனைத் தூண்டுகிறாள். சிறிது அவலை எடுத்துக்கொண்டு, கண்ணனைக் காண. குசேலர் துவாரகையை அடைகிறார்.]



## காட்சி 1.

| | |
|---|---|
| **இடம்:** | துவாரகையில் கண்ணபிரான் அரண்மனே. |
| **காலம்:** | காலே நேரம். |
| **பாத்திரங்கள்:** | குசேலர், வாயிற் காப்போர், கண்ணன். |

**குசேலர்**—(காவலரை நோக்கி) ஐயா ! நான் ஒரு வழைப் பிராமணன். என் பெயர் **சுதாமன்**; என்னேக் **குசேலன்** என்றும் அழைப்பார்கள். கண்ணன் என் பள்ளித்தோழன். கண்ணபிரானேக் காண ஆவல் கொண்டு தொலேயிலிருந்து இங்கு வந்திருக்கிறேன். தயவுசெய்து, என் வருகையைக் கண்ணனிடம் தெரிவியுங்கள்.

**முதற் காவலன்** — (நகைத்து) பேஷ்! இது வெகு விநோதம்! கண்ணனேக் காண வேண்டுமென்று வெகு நாட்களாகக் காத்துக்கொண்டிருக்கும் இம்

மன்னர்களைப் பாரும். இவர்களே உட்செல்ல முடியாமல் இருக்க, உம்மை மட்டும் முன்னால் விடமுடியுமோ? கண்ணனை உம்மால் காணமுடியாது; அந்த ஆசையை அகற்றும்; ஊருக்குத் திரும்பிச் செல்லும்.

**குசேலர்** — (வருத்தத்துடன்) அப்பா! என் கண்ணனைக் காண ஆவல் கொண்டு கடுந்தூரம் வந்த என்னைத் திரும்பிப்போகச் சொல்லாதே. என் வருகையைக் கண்ணனிடம் தெரிவித்தால், அவர் என்னை அழைப்பார். கொஞ்சம் தயவு செய்யுங்கள்.

**முதற் காவலன்** — (கோபத்துடன்) உம்மை எமது கண்ணன் காண்பது அரிது. வந்த வழியே திரும்பிச் செல்லும்.

**இரண்டாம் காவலன்** — நண்பா! அவ்வாறு கூறுதல் வேண்டா. இவர் ஒரு பெரியார்! தவசிரேஷ்டர்; கண்ணன் அன்புக்குப் பாத்திரமானவர்; அவருடைய பள்ளித்தோழர். நானே கண்ணனிடம் சென்று இவர் வருகையைத் தெரிவிக்கிறேன். (குசேலரை நோக்கி) அந்தணரே, சற்று இவ்விடம் அமருங்கள். (காவலன் கண்ணனிடம் சென்று, பின் திரும்பி வருகிறான்) பிராமணோத்தமரே! என்னுடன் வாரும். உம்மைக் காணக் கண்ணன் ஆவலாயிருக்கின்றார். (குசேலர் உட்செல்லுகிறார்.)

IB
031 (9)
N46
87108



காட்சி 2:

இடம் : அரண்மனை உட்புறம்.
காலம் : காலை நேரம்.
பாத்திரங்கள் : கண்ணன், குசேலர், ருக்மிணி, சத்யபாமா, ஏவலாளர்.

**கண்ணன்** — குசேலா! நண்பா! வா! உன்னைக் கண்டு வெகு நாட்களாயினவே? இங்கு உட்கார்.

(குசேலருக்கு உபசாரம் செய்கிறார்.)

**குசேலர்** — கண்ணா! ஏன் எனக்கு இவ்வளவு உபசாரம்? நான் இதற்கு அருகனல்லவே!

**கண்ணன்** — நண்பா! எனக்கும் உனக்கும் பேதம் ஏது? என் தோழனுக்குப் பணிவிடை செய்வதில் ஆட்சேபணை என்ன? உன் மனைவி மக்கள் சுகமா?

**குசேலர்** — அன்பா! உன் அருளால் யாவரும் சுகமே.

**கண்ணன்** — எனக்கு என்ன கொண்டுவந்தாய்? நீ வெறுங் கையுடன் வந்திருக்க மாட்டாயே! ஆ! அது என்ன மூட்டை?

**குசேலர்** — அதுவா? சிறிது அவல்; மிகவும் அல்பமான பொருள்.

**கண்ணன்** — எங்கே? அதை இப்படிக் கொடு, எனக்குத்தான் அவல் வெகு பிரியமாயிற்றே! (அவலைத் தின்கிறார்) குசேலா! நீ எழுந்து நீராடு. பின்னர் புசிப்போம். (இரண்டுநாட்கள் கழித்துக் குசேலர் தம் ஊருக்குப் புறப்படுகிறார். அவர் செல்லுவதை சத்யபாமா பார்த்தாள்.)

**சத்தியபாமா** — இது வென்ன அதிசயம்? தம் பழைய நண்பரைக் கண்ணன் வெறுங்கையுடன் அனுப்புகிருரே! இவ்வேழைக்குச் சிறிது செல்வம் உதவலாகாதா?

**ருக்மிணி** — பாமா! பதருதே. கண்ணன் உள்ளக் கருத்தை நம்மால் அறிய இயலுமா? [உட்செல்லுகின்றனர்].

காட்சி 3.

இடம் குசேலருடைய கிராமம்: அவந்தி

காலம்: மாலை.

பாத்திரங்கள்: குசேலர், சுசீலை, குழந்தைகள்.

[குசேலர் தமது ஊருக்குள் வருகிருர். தம் வீட்டைக் காண முடியவில்லை. ஒரு அரண்மனை போன்ற வீட்டினின்றும் மனைவியும் மைந்தர்களும் எதிர்கொண் டழைக்கின்றனர்]

**குசேலர்** — (வியப்புற்று) ஆ! ஈதென்ன? கனவா? நனவா? சுசீலா! இச் செல்வமெல்லாம் ஏது?

**சுசீலை** — இவை யாவும் கண்ணபிரான் திருவருளால் கிடைத்தவை.

**குசேலர்** — அப்படியா? 'செல்வம் வேண்டும்' என்று கண்ணனைக் கேட்க நான் மறந்தேன். நமது குறையை அறிந்து தீர்க்கவல்லான் கண்ணனே யன்ரே! அவன் கழலிணைகளை நாம் யாவரும் சேர்ந்து துதிப்போம் வாருங்கள்! (எல்லாரும் பாடுகின்றனர்.)

கங்கையிற் புனித மாய காவிரி நடுவு பாட்டுப்
பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்வேன்? ஏழையேன் ஏழையேனே!

---

I. இந்நாடகத்தை மௌனமாய்ப் படித்து நடித்துக் காட்டுக.

II. 1. குசேலர் என்பவர் யார்?
2. அவர் ஏன் கண்ணனைப் பார்க்கச் சென்றார்?
3. கண்ணன் அவரை எவ்வாறு வரவேற்றார்?
4. கண்ணன் குசேலருக்கு எவ்வாறு பொருள் அளித்தார்?

III. கடின பதங்கள்: யாசகம், நெடுந்தொலை, விநோதம், அரிது, அமரும், அல்பம், நனவு, திருவருள், கழலிணை.

IV. இலக்கணம்: காலத்தைத் திருத்துக.
1. குசேலர் நேற்று துவாரகை வருவார்.
2. இன்று நான் துவாரகை சென்றேன்.
3. காவலர் நாளை என்னைத் தடுத்தனர்.
4. கண்ணன் குசேலருக்கு விருந்து நாளை அளித்தார்.
5. நாளைக்கு என் காலில் முள் தைத்தது.

V. இந்நாடகத்தை வசனரூபமாக எழுது.

# 26. செய்யுட் பகுதி

I

1. நறுந்தொகை :

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும்மே.

2. வெற்றிவேற்கை :

கற்கை நன்றே கற்கை நன்றே;
பிச்சைபுகினும் கற்கை நன்றே.
கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறத்த பதராகும்மே.
எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பர்;
அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

— அதிவீரராம பாண்டியர்.

3. நெசவின் பெருமை :

செய்யுந்தொழில் அனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை — வையகத்தில்
தெள்ளு தமிழ்வேதம் செப்பி அந்நாள் சீர்படுத்தும்
வள்ளுவர் கொண்டதல்லவா ?

— தண்டபாணி சுவாமிகள்.

4. காரியத்தில் கருத்துக்கொண்டவர்:

மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர். — குமாரகுருபர சுவாமிகள்.

5. விருந்தளிக்கும் முறை:

ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழ்இட்டாலும் உண்பதே அமுதமாகும்;
முப்பழ மொடுபால் அன்னம் முகம்கடுத் திடுவராகில்
கப்பிய பசியிேைடும் கடும்பசி ஆகுந்தானே.

— விவேக சிந்தாமணி.

6. அற்பர் தன்மை:

கொடியருக்கு நற்புத்தி சொன்னாலும்
தெரியாது; கொடையில்லாத
மடையருக்கு மதுரகவி உரைத்தாலும்
அவர் கொடுக்க மாட்டார் கண்டீர்;
படியளக்கும் தண்டலைநீள் நெறியாரே!
உலகமெலாம் பரவிமூடி
விடியுமட்டும் மழைபெயினும், அதின் ஓட்டாங்
கிச்சில்முளை வீசிடாதே. — தண்டலையார் சதகம்

குறிப்புக்கள்

1. தேம்படு - மதுரம் பொருந்திய; திரள் - திரண்ட, தெண்ணீர் கயம் - தெளிந்த நீரையுடைய குளம். சினை - முட்டை. நுண்ணிது - மிகச் சிறியது. அண்ணல் - பெருமை. அணி - அலங்காரம். 2. நலம் - பெருமை. வையகம் - பூலோகம். 4. மெய் - உடல். துஞ்சார் - தூங்கமாட்டார். செவ்வி - காலம். கருமம் - காரியம். 5. கப்பிய - மிகுந்த. முப்பழம் - மா, பலா, வாழைப் பழங்கள். 6. கொடை - தருமம். மதுரகவி - இனிமையான பாடல்.

## II. மூதுரை

1. நன்றி யொருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

2. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே — அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர்.

3. அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி
எடுத்த கருமங்க ளாகா — தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்களெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

4. உற்ற விடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ ? — கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான் ?

5. நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே; — நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

6. நெல்லுக் கிரைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

7. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனல் முளையாதாம் ; — கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

8. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்லமரங்கள் — சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

9. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

10. அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

11. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவா ருறவு.

12. ஆழஅமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழிமுகவாது நானாழி — தோழி!
நிதியுங் கணவரு நேர்படினும் தத்தம்
விதியின் பயனே பயன்.

13. உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா;
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்;
அம்மருந்து போல்வாரு முண்டு.

14. கற்பிளவோடு ஒப்பர் கயவர்; கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும்போல்வரே-விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

15. நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் — கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர்முகப்பர்; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

16. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு — நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர்; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

17. மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன்சிறப்புடையன்-மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்ற விடமெல்லாஞ் சிறப்பு.

18. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக்கு ஆகார மானாற்போல் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

— ஔவையார்.

## குறிப்புக்கள்

1. நன்றி - உபகாரம். தாள் - பாதம். 2. ஈரம் - இரக்கம். ஈந்த - செய்த. 3. பருவம் - பழுக்கும் காலம். கருமம் - காரியம். 4. உற்ற - துன்பம் நேர்ந்த. வழங்கும் - கொடுக்கும். பற்றலர் - பகைவர். 6. தொல் உலகில் - மிகப் பழமையான உலகத்தில். 7. பண்டு - முதல். ஆற்றல் - வலிமை. 8. காட்டகம் - காடு. 9. பொல்லாச் சிறகு - அழகில்லாத சிறகு. 10. அறிவிலர் - புத்தியில்லாதவர். உற்றுழி- நேர்ந்தவிடம். 12. தத்தம் - அவரவர்களுடைய. 14. கயவர் - தீத்தொழில் புரிபவர். வடு - குறி. சான்றோர் - மேன் மக்கள். 15. கயம் - குளம். காமுறுவர் - ஆசைப்படுவர். 16. கரந்து - ஒளித்து. கரவுடையார் - வஞ்சனையுடையார். 17. மாசற-குற்றமில்லாமல். 18. விடகாரி-விஷ வைத்தியன்.

## III. நல்வழி

1. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

2. வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே — மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை.

3. ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் — ஒன்றே
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். — ஔவையார்.

## குறிப்புக்கள்

1. பெருக்கு - தண்ணீர், வெள்ளம். ஏற்றவர் - யாசகம் செய்பவர். நல்கூர்ந்தார் - தரித்திரர். 2. பாதாளமூலி - சப்பாத்தி. சேடன் - ஆதிசேடன். மன்று - நியாய சபை. ஓரம்- ஒருவர் பக்கமாக. 3. வந்தெய்தும் - வந்து சேரும், சம்பவிக்கும்.

## VI. நன்னெறி

1. நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமைநொய்தாகும் -பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மை நிலைபோம்.

2. தம்குறை தீர்வுள்ளார், தளர்ந்து, பிறர்க்குறூஉம்
வெம்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்; — திங்கள்
கறை இருளை நீக்கக் கருதாது, உலகில்
நிறை இருளை நீக்கும் மேல் நின்று.

3. இன்சொலால் அன்றி, இருநீர் வியன் உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே; —பொன்செய்து
அதிர்வளையாய்! பொங்காது அழல் கதிரால்;தண்என்
கதிர் வரவால் பொங்கும் கடல்.

4. என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்-துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து?

ம் அறிவான் அலது பிறப்பினல்
காள் உயர் விழிவு வேண்டற்க! — நீக்கு
பரார் அரவின் பருமணிகண்(டு)? என்றும்
வரார் கடலின் கடு.

— சிவப்பிரகாசர்.

குறிப்புக்கள்

1. நீக்கம் அறும்-வேற்றுமை யில்லாத. நொய்து-அற்பம். புல்லினும் - ஒன்று சேர்ந்தாலும். திண்மை - வலிமை. 2. குறை - துன்பம். உறாஉம்-உண்டாகிய. வெம்-கொடிய. விழுமியோர் - பெரியோர். 3. இருநீர் - பெரிய கடலினல் சூழப்பட்ட. வியன் - பெரிய. அழல்கதிர் - சூரியன். தண்-குளிர்ச்சி. 4. முகமன் - உபசாரவார்த்தை. துன்று - அதிசமாக. நயந்து - அன்புகொண்டு. 5. ஆக்கும் - உயர்வு தாழ்வுகளை உண்டாக்கும். மீக்கொள் - மேலாகக் கொள்ளப்பட்ட. கடு - விஷம்.

# தேச வாழ்த்து

1. நம் நாடு செழிக்க வேண்டும் நாமெல்லாம் களிக்க
தம் நாடு மட்டும் வாழப் பிறர்நாட்டைத் தவிக்கச் செ
வெம்நாடுகளுக்கெலாமோர் விழுமிய ஞானமார்க்கம்
எம் நாடு உதவிற்றென்று இந்தியன் மகிழவேண்டும்.

2. கண்டவர் மகிழவேண்டும் ; கேட்டவர் புகழவேண்டும் ;
கொண்டவர் குலவ வேண்டும்; குறைந்தவர் நிறைந்துமெச்ச
அண்டின எவரும் அச்சம் அடிமையை அகற்றுமாறு
தண்டமிழ் அலைகள் வீசி நம் நாடு தழைக்கவேண்டும்.

3. புதுப் புது அறிவைத்தேடிப் போயலைந்துழன்று நாடி
விதப்பல விஞ்ஞானத்தை விரித்திடும் மெய்ஞ்ஞானத்தால்
பொதுப்படக் கலைகளெல்லாம் தமிழிலே புதுமை பூண
மதிப்போடு எவரும் போற்ற நம்நாடு மணக்கவேண்டும்.

4. தாழ்வுகள் யாவும் போகத் தரித்திரக் கொடுமை நீங்கி
சூழ்கடல் உலகில் மக்கள் சுதந்திரத்துடனே வாழ்ந்து
ஆழ்கலை அறிவும் ஓங்கி ஆண்டவன் அன்பைக் கண்டு
வாழ்ந்திடவேண்டுமென்றே நம் நாடு வாழவேண்டும்.

**நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை**

87108

'Caxton Press', Madras — (H)
No. M. S. 10)—5-11-46

۱۳۲۹/1065